
# உதயம்



கலை இலக்கிய காலாண்டு சஞ்சிகை

உதயத்திற்கு எமது வாழ்த்துக்கள்

சண்முகா ஏஜன்சி

Yummee
TOFFEES

சண்முகா ஏஜன்சி

விநியோகஸ்தர்கள் : யமீ டொபி
159, திருமலை வீதி,
மட்டக்களப்பு
தொலைபேசி: 065-2139

# உதயம்

ஒளி : 1

கதிர்: 1

05 நேர்காணல் - கோமல் சுவாமிநாதன்

11 ஆக்கிரமிப்பு - சிறுகதை ஏகலைவன்

17 இலங்கைப் பெண் எழுத்தாளர்கள் சில அவலங்கள் - செ. யோகராசா

23 வினோதமான சாதனம் - உடுவை தில்லைநடராசா

26 இராமபிரான் இலக்குவனுக்கு தமிழிலும் அறிவுரை கூறினார். அகளங்கன்

29 படையல் - மௌ. சித்தார்த்தன்

32 நிகழ்வுகள் - கலை இலக்கியச் செய்திகள் - துரை - நடேஸ்

35 பயணம் திக்கவயல் - சி. தர்மகுலசிங்கம்

37 சிவகுமாரனின் ஓவியங்கள் அருந்ததி சபாநாயகம்

43 இஸ்த்திரிக்கை - சிறுகதை ஆனந்தன்

49 கொழும்பு நாடக மேடை - கே. எஸ். சிவகுமாரன்

57 மலையக இலக்கிய வளர்ச்சி - அந்தனிஜீவா

வாடிக்கையாளர்கள்

அன்பர்கள்

ஆதரவாளர்களுக்கு

எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மும்மொழிகளிலும்

அழகிய அச்சு வேலைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்.

★ வளர்மதி அச்சகம் ★

(விஜயா படமாளிகை அருகில்)

இல. 28, லோயிட்ஸ் அவெனியூ,

மட்டக்களப்பு.

☎ 065—2577.

# பொன்னுலகில் கால்பதிப்போம்

— "திமிலைத்துமிலன்" —

"காலமகள் பெற்றெடுத்த
கவின் மழலைப் புத்தாண்டே!
ஞாலமிசை நின்வரவு
நல்வரவா யாயிடுக.
சால வளம்மலிந்து
சாந்தியெங்கும் தங்கிடுக
சீலம் பலதழைத்துச்
சிறப்போங்க வந்திடுக..."

"என்ன தமிழா; இன்றுனக்குப் புத்தாண்டா?
இன்னல் ஒழியவில்லை, ஏனடா புத்தாண்டு?
தின்ன வரும் பகைகள்; சிறைகள்; உயிர்ப்பலிகள்;
இன்னும் விடிவதில்லை; இதற்குள் ஓர் புத்தாண்டா?

உண்மைதான், இந்த உணர்வு நியாயம்தான்.
அண்மையில் இல்லை, ஆண்டுபல சென்றாலும்
திண்ணம், ஒளிச்சுடரே தெரிவதற்கு வாய்ப்பில்லை.
மண்ணாளும் வர்க்கம் மனம்கனிய வாய்ப்பில்லை.

''இனச்சிக்கல் இல்லை, இருப்பதொரே வாதம்தான்.
வாதத்தைத் தீர்க்க மருந்துதரப் போகின்றேன்.
விசுவாச மிக்க மிகநல் லடிமைகளாய்
நீங்கள் இருத்தல் நியதி; – அதேதகுதி''...

உணர்ந்தாயா? இந்த உரைக்கு எது காரணம் சொல்?
நமக்குள் பகைமை; நாம் ஒன்றாய் நில்லாமை;—
...ஒற்றுமை என்றும் உதியாதா நம்முள்ளே?
வேற்றுமை ஒன்றே விதியா? இதேகதியா?

வார்த்தை இதுஎங்கள் மனத்தைப்புண் ணாக்கிடினும்
ஒன்றை ஐய மில்லாது உணர்ந்தோம். அதுஉண்மை.
பாறைக்குள் ஈரம் படிய இடமில்லை.
'ஒற்றுமை' என்ற உளிநமது கையிலுண்டா?

உளியை எடு, பொழி; விதியை
உடை, நளினம் படை; புதிய
வெளியில் ஒரு சிலை நிறுவு.
விடிவு!; புதுஒளி!;... உதயம்!.

அதற்காக,

புத்தாண்டை வரவேற்போம்;
பொன்னுலகில் கால்பதிப்போம்.



கவிமணி திமிலைத்துமிலன் மணி விழாக் காணும் ஆண்டு இது (1994). அவரின் அறிவுக்கும் பெருமைக்கும் மதிப்பளிக்கும் முகமாக 'உதயம்' அவரின் இக்கவிதையை வெளியிடுவதில் மகிழ்ச்சி கொள்கின்றது.

ஆ–ர்.

# ஒரு நேர்காணல்

## 'சுபமங்களா' ஆசிரியர்

## கோமல் சுவாமிநாதன்

---

- மட்டக்களப்பு காயல்களும், சோலைகளும் சூழ்ந்த அழகான ஒரு சிறிய நகரம். எளிமையான ஒரு நகரமாகும்.

---

- தமிழகத்தில் நிறைய வெளிப்பாடுகள்– தேறுபவை சொற்பம். இலங்கையில் குறைய வெளிப்பாடுகள் - ஆனால் தேறுபவை அதிகம்.

---

- பாலு மகேந்திரா ஒருவர் தான் அதற்கான முயற்சிகளிலீடுபட்டுள்ளார்.

---

- தலித் இலக்கியமும் ஒரு உலகளாவிய இலக்கியமாக மாற்றப்பட முடியும்.

---

கேள்வி: திரு. கோமல் சுவாமிநாதன் அவர்களே! நீங்கள் மட்டக்களப்புக்கு வந்திருக்கிறீர்கள். மட்டக்களப்பின் பல இலக்கியக் கூட்டங்களிற் பங்கு பற்றியிருக்கிறீர்கள். மட்டக்களப்பின் விஜயம் உங்களில் ஏற்படுத்திய மனப்பதிவுகள் யாவை?

பதில்: மட்டக்களப்பு காயல்களும், சோலைகளும் சூழ்ந்த அழகான ஒரு சிறிய நகரம்; எளிமையான ஒரு நகரம். நகரத்தின் பயங்கர வடிவங்கள் இங்கு இல்லை. இங்கு தனிப்பட்ட முறையில் பண்பாடு, இலக்கியங்கள் என்பன வளர்ந்து வந்ததாக அறிகிறேன்; புராதன ஒரு டச்சுக் கோட்டையைக் கூட இங்கு பார்த்தேன். அதோடு பல்கலைக்கழகத்திலும், மற்றும் இடங்களிலும் எல்லாரையும் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. இலக்கியத்தைப் பற்றிய குறிப்பாக தமிழ் நவீன இலக்கியம் பற்றியும், நாடகம் பற்றியும் ஒரு ஆழ்ந்த பிரக்ஞை (Awarness) இங்குள்ள எழுத்தாளர்கட்கும், மாணவர்கட்கும் நிறைய இருப்பதைப் பார்த்து ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. இந்தச் சின்ன ஊரில் இவ்வளவு இலக்கியப் பிரக்ஞையுள்ள எழுத்தாளர்கள் இருக்கிறார்களா? என்று வியப்பாக இருந்தது. இங்குள்ள இலக்கியக் குழுக்கள் ஒன்றாக அமைந்து நடத்திய கலந்துரையாடலில் நான் இதனைக் கண்டு வியந்தேன்; மகிழ்ந்தேன்.

கேள்வி: இலங்கையில் தாங்கள் பல சிங்களத் தமிழ்க் கலைஞர்களைச் சந்தித்துள்ளீர்கள். தமிழகத்திலும் பலரைச் சந்தித்திருப்பீர்கள். இவை பற்றிய உங்கள் அனுபவங்கள்... ... கருத்துக்கள்?

பதில்: தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழ்ச் சூழலுக்கு ஒத்துக் கொள்ளாத ஏராளமான மோசமான படைப்புகள் தமிழ் நாட்டில் வந்து கொண்டுள்ளன. ஆனால் இலங்கையில் அதன் வருகை குறைவாகவும், காத்திரமானவற்றின் வருகை அதிகமாகவும் இருப்பதாக நான் உணர்கிறேன். தமிழகத்திலும் நிறைய வெளிப்பாடுகள், தேறுபவை சொற்பம். இலங்கையில் குறைய வெளிப்பாடுகள். ஆனால் தேறுபவை அதிகம்.

கேள்வி: நீங்கள் ஆரம்பத்தில் எமக்கு நாடகக் கலைஞராகத்தான் தெரிய வந்தீர்கள்; உங்களுக்கும் நாடகக் கலைஞர் சகஸ்ரநாமத்திற்கும் பழைய நாடகக்காரர்கட்கும் நிறையத் தொடர்பு இருப்பதாக அறிகிறோம். அவற்றைப் பற்றி நாம் அறிய விரும்புகிறோம்.

பதில்; எனக்கு ஏற்பட்ட தொடர்புகளெல்லாம் தொழில் முறை சார்ந்த நாடகக் குழுக்களுடன்தான். ஏனெனில் அவர்களின் பிரச்சனைகள் தான் என் பிரச்சனைகளும். அங்குள்ள தொழில் சார் நாடகக் குழுக்கள் எல்லாம் நாடகத்தால் வாழ்க்கை நடத்துகின்றன. என் குழுவையும் அப்படித்தான் நான் அமைத்தேன். கல்லூரிகளிலோ, பல்கலைக் கழகங்களிலோ நடத்துகிற நாடகங்களுக்கும்; நான் போடுகிற நாடகங்களுக்குமிடையே அமைப்பு விடயங்களில் பல வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக நேற்று நான் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறை தயாரித்துக் கொண்டிருக்கும் ஒரு நாடகத்தை முழு ஒத்திகையாகப் பார்க்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அதிலே 13 பெண்கள் பங்கு பற்றினார்கள். இதெல்லாம் நான் கனவிற்கூட நினைத்துப் பார்க்க முடியாது. கனவில் நினைத்துப் பார்த்தாலே ஹார்ட் வெடித்துவிடும். எங்களுடைய பல நாடகங்களில் கதாநாயகனுக்கு தாயார் இருக்க மாட்டா. பக்கத்து வீட்டுக்காரனுக்குத் தாயார் இருக்க மாட்டா. ஒரு வீடென்று எடுத்துக் கொண்டால் அண்ணனுக்குத் தங்கை இருக்க மாட்டா. இப்படியாக நாங்கள் ஒற்றைப் புரட்சி செய்து கொண்டிருக்கிறோம். எங்கள் நாடகத்தில் ஒரு கதாநாயகி அல்லது இரண்டு பேர் இருப்பார்கள். அவ்வளவுதான். எனினும் பாரம்பரியமான புறோசோனியம் மேடை நாடகத்தை நான் கற்றுக் கொண்டது முழுக்கமுழுக்க சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ் குழுவில் இருந்துதான்.

**கேள்வி:** எமது நாட்டு முதுபெரும் நாடகக் கலைஞராக பேராசிரியர் சரத்சந்திரா அவர்களைச் சந்தித்திருப்பீர்கள்; தங்களின் மனப்பதிவு.........



அதி தீவிரமான விமர்சனங்கள் வருகையில் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பது புரியாமற் போய்விடுகிறது.

**பதில்:** அவர் ஒரு முழுமையான கலைஞர். எந்தவிதமான assumption உம் இன்றி உரையாடினார். தன்னுடைய நாடகங்களுக்கான ஆடல, பாடலகளைத தமிழ் நாட்டு மேடையில் இருந்து தான் எடுத்ததாகக் கூறினார். தனது துறையில் ஆழ்ந்த ஞானம் மிக்கவர் அவர். தமது துறையில் ஆழ்ந்த ஞானம், இங்குள்ள பல கலைஞர்களிடம் நான் அவதானித்த ஒன்று.

**கேள்வி:** சுபமங்களா ஒரு முக்கிய பத்திரிகையாக இப்போது வலம் வருகிறது; அதை நடத்துகையில் பலவிதமான இலக்கியக் குழுக்களுடனும் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருக்கும். சுபமங்களா பத்திரிகை சிறு பத்திரிகைகட்கு எதிரான-அல்லது சிறுபத்திரிகைகளை வளரவிடாத பத்திரிகை என்றொரு அபிப்பிராயம் இருப்பதாக அறிகிறோம். அது உண்மைதானா?

பதில்: அப்படியான அபிப்பிராயம் பரந்து பட்ட அளவில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எல்லாச் சிறு பத்திரிகையாளர்களும் என்னுடைய நண்பர்கள். அவர்கள் எல்லாரும் சுபமங்களாவின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள். ஆனால் ஒருவேளை ஒரு குறிப்பிட்ட குரூப்பில் அந்த அபிப்பிராயம் இருக்கக் கூடும். சிறு பத்திரிகைகட்கு ஒரு நோக்கம், ஒரு Target Areaders அதற்கென்ற ஒரு அரசியல் எல்லாமேயுண்டு. சுபமங்களா என்பது வேறு, சிறுபத்திரிகைகள் என்பது வேறு. சிறு பத்திரிகைக்கான அம்சங்களைச் சுபமங்களா உள்வாங்கிக் கொண்டாலும் சுப மங்களா சிறுபத்திரிகை ஆக முடியாது. அதுபோல சுபமங்களா போடும் சில சமாசாரங்களைச் சிறுபத்திரிகை போடமுடியாது. எனவே சிறுபத்திரிகை இயக்கம் தனியாகவும் இதுபோன்ற முயற்சிகள் தனியாகவும் நடப்பதே சரி என நான் நினைக்கிறேன்.

கேள்வி: தமிழ்நாட்டில், நாடகம் தவிர வேறு என்னென்ன துறைகளில் நவீன போக்குகளை நீங்கள் அவதானித்திருக்கிறீர்கள்?

பதில்: இலக்கியப் படைப்புகளில் நவீனத்துவம் நிறையக் காணப்படுகிறது. மொழியின் பயன்பாட்டை எவ்வாறு கொணரலாம் என்பதில் பிரக்ஞை காணப்படுகிறது. Narrative Style, எடுத்துக்கொண்ட கதையின் அம்சங்கள் இவைகளில் நவீனத்துவத்தைக் காண்கிறேன்;

இன்னொரு போக்கு – அமைப்பு முறைக்கு உட்படாத விடயங்களை எழுதுதல், வார்த்தையாடல் என இதை அழைக்கலாம். இத்தகைய புதிய போக்குகள் பலவுள்ளன. என்னைப் பொறுத்தவரை கொஞ்சக்காலம் பொறுத்துத்தான் இவற்றின் பாதிப்பு தமிழ் இலக்கியத்தை எந்தளவு பாதித்தது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

கேள்வி: தமிழ்நாட்டு விமர்சகர்களிடையே பல்வேறு விமர்சனப் போக்குகளைக் காணுகிறோம். சில விமர்சனங்களை விளங்கிக்கொள்ளுதல் சிரமமாகவும் உள்ளது. இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: விமர்சனம் பெரிய விடயம். ஆனால் சில நேரங்களில் விமர்சனங்கள் என்பது புத்தக மதிப்பீடாகக்கூடப் போய்விடுகிறது. புத்தக விமர்சனம் அல்லது நூல்பற்றி, இலக்கியம் பற்றி விமர்சனம் என்பது பெரிய அளவுக்குப் பத்திரிகையில் வராமையினால் அவர்கள் சொல்லக் கூடிய இலக்குகளை நாம் அடையாமற் போகலாம். பலவிதமான விமர்சனப் போக்குகளுள்ளன, இடதுசாரி, அல்லது மாக்ஸிய விமர்சகர்கள் என்றுசொல்லப்படுபவர்களிடம்கூட பலவிதமான மாக்ஸிய சித்தாந்தங்களுக்கு அவர்கள் புரிந்து கொண்டதற்கு ஏற்ப விமர்சனங்கள் அமைந்

துள்ளன. அதைவிட க. நா. சு. பாணியில் ஒரு சுவை விமர்சனம்-ரசிப்புத்தன்மையைக் கேந்திரமாகக் கொண்ட ஒரு விமர்சன முறை உண்டு. இதை தவிர சி. சு. செல்லப்பாவுடைய ஒரு விமர்சனப் பாணியுண்டு. இவ்வண்ணம் பல விமர்சனப்போக்குகள் அங்குண்டு. சிலவேளைகளில் அதி தீவிரமான விமர்சனங்கள் வருகையில் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பது புரியாமற் போய்விடுகிறது. சில தத்துவார்த்தச் சிக்கல்களுள் மாட்டிக்கொண்டு எழுதுகிறார்கள். அதுதான் காரணம் என நினைக்கிறேன். விளங்கிக்கொள்வது சிரமமெனத்தாங்கள் கூறுவது உண்மைதான்.

கேள்வி: தமிழில் அண்மைக்காலமாக நவீன விமர்சன முறைகள் அறிமுகமாகி உள்ளன. இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இத்தகைய முறைகள் உள்ளனவா?

பதில்: மகராஷ்டிராவில் இதன் போக்கு அதிகமில்லை, கர்நாடகமாநிலத்தில் இதையொட்டி ஆழமான போக்கு உண்டு. ஆந்திர மாநிலத்தில் அவ்வளவு இல்லை என அறிகிறேன். இப்போக்குகள் பொதுமக்கள் மத்தியில் வராமல் பல்கலைக்கழக மட்டத்தில் ஒரு Acadamic Matter ஆகத்தான் இருந்து கொண்டு வருகிறது என்று நினைக்கிறேன்.

கேள்வி: அலை அலையாகத் தமிழ்நாட்டில் வரும் வர்த்தக தமிழ்ச் சினிமாவுக்கு மத்தியில் தமிழ்நாட்டில் பிலிம் சொஸைட்டி போன்ற நிறுவனங்களின் பிரக்ஞை பூர்வமான நல்ல தமிழ்ச்சினிமா பற்றிய செயற்பாடுகளை நாம் பத்திரிகை வாயிலாக அறிகிறோம். அதோடொட்டிய தகவல்களை நாம் அறிய விரும்புகிறோம்.

பதில்: Film appriciation Course (சினிமா - ரசிப்பு நெறி) என்பது சென்னையில் இப்போது அடிக்கடி நடக்கிறது. பிலிம் சொஸைட்டியினால் நல்ல பல படங்களையொட்டி விவாதங்கள் நடத்தப்பட்டு நல்ல படங்களைப் பார்த்து ரசிப்பதற்கான ஒரு வட்டம் உருவாகியுள்ளது. இப்போதைக்கு இந்த சினிமா ஆர்வலர் முழு நீளப்படம் எடுக்காவிடினும் இதிற் பல பேர் பம்பாயில் நடந்த திரைப்பட விழாவிற் கலந்து கொண்டார்கள். அதில் கலந்துகொண்ட அவர்களுக்கு 15 நிமிட 30 நிமிட நேரத்திற்காவது இவைபோன்ற அர்த்தமுள்ள ஒரு சிறுபடங்களைத் தயாரிக்கலாம் என்ற எண்ணம் உருவாகியுள்ளது. சென்னையிலும் சிறுபட விழா ஒன்றினை நடத்த முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. இம்முயற்சிகள் எதிர்காலத்தில் பயன்

தரக்கூடும். ஆனால் தற்போது வியாபார சினிமாவில் ஈடுபடக் கூடிய பிரக்ஞையுடைய டைரக்டர்கள் யாரும் இல்லை. குறிப்பாகச் சொன்னால் பாலு மகேந்திரா ஒருவர்தான் அதற்கான முயற்சிகளிலீடுபட்டுள்ளார். கமலகாசனுக்கு அந்தமாதிரி எண்ணங்கள் இருந்தாலும் கூட இன்னும் தீவிரமான, அது போன்ற படங்கள் கமலகாசனிடமிருந்து வரவேண்டியுள்ளது.

கேள்வி: தலித் இலக்கியத்திற்கு சுபமங்களா மிக ஆதரவு தருகிறது. ஆனால் இலக்கியத்திற்கு உலகப் பார்வை இல்லாமையினால் அதுவளர முடியாது என்ற ஒரு மாற்றுக்கருத்தும் வைக்கப்படுகிறதே. இதுபற்றி உங்கள் கருத்து

பதில்: தலித் இலக்கியம் பற்றி தலித் எழுத்தாளர்களும், தலித் சிந்தனையுடைய தலித் அல்லாத எழுத்தாளர்களும் நிறையப் பேசுகிறார்கள். இதுபற்றி நிறைய விவாதங்கள் நடக்கின்றன. தலித் கலை இலக்கிய முயற்சிகளும் நடந்துகொண்டுள்ளன. தலித்களுக்கென ஒரு கலாசாரம், பண்பாடு தமிழ்நாட்டில் இருந்தது. அது சரியானபடி பதிவு செய்யப்படவில்லை. அது வரவேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

அது உலகப் பார்வையிலிருந்து தனித்துப்போகும் என்று நான் நினைக்கவில்லை. எப்படி அமெரிக்க நீக்ரோ இலக்கியம் இன்று உலக இலக்கியமாகப் போற்றப்படுகிறதோ அது போலத் தலித் இலக்கியமும் ஒரு உலகளாவிய இலக்கியமாக மாற்றப்பட முடியும்.

### இயற்கையான கிருமி நாசினி

அழுகிய பொருட்களைச் சாப்பிட்டால் கிருமிகள் உட்சென்று தொற்று நோய்களை உண்டாக்கி விடுசிமென்று சொல்கிறோம். அழுகிய மாமிசத்தைச் சாப்பிடுகிறதே கழுகு. இதற்குத் தொற்று நோய்கள் வரவேண்டுமே. கழுகுகளுக்கு நோய்கள் தொற்றிக் கொள்ளாத வகையில் இயற்கை அதற்குப் பாதுகாப்பை வழங்கியுள்ளது. அதன் சொண்டின் கனதி சூரியஒளி படும் பொழுது அதனைக் கிரகிப்பதால் கிருமிகள் அழிந்து விடுகின்றன. கழுகின் காலிலுள்ள நிகமும் அப்படிப்பட்டது. உடம்பிற்குட் செல்லும் உணவில் கிருமிகள் இருந்து தொற்றிக் கொள்ளுமேயென்று யோசிக்கிறீர்களா? கழுகின் குடலிலிருந்து சுரப்பிகள் மூலம் வெளியாகும் ரசாயனப் பொருள் கிருமிகளை நாசமாக்கி விடுகின்றது.

# ஆக்கிரமிப்பு

ஏகலைவன்

''நீங்களே சொல்லுங்க ஐயா, இதென்ன ஞாயம்? சிங்கப்பூர் ஐயாவுக்கு இல்லாத நிலபுலனா? இந்த ஏழையின்ர சொத்திலை ஏன் இவ்வளவு அக்கறை?''

சின்னத்தம்பி உடையாரிடம் வந்து பசுபதி பக்குவமாக முறையிட்டான்.

''இந்தா, பசுபதி! உனக்குத் தான் தெரியுமே, எனக்கும் அந்தாளுக்குமிடையிலை இருக்கிற விரோதம். அவனும் பெரிய மனுசன். ஆளம்பு சேனை என்று உங்கடை ஆக்களை வைச்சே உன்னைப் பதம் பார்ப்பான். நியாயம் அநியாயத்தைப் பற்றி எவன் கேட்கிறான். சரி... ஒருக்கால் கதைச்சுப் பார்ப்பம். கனநாளாய் உன்னை இந்தப் பக்கம் காணயில்லையாமென்று அம்மாவும் தேடினவ. எனக்கு வெளியிலை அவசரமாய் ஒரு வேலையிருக்கு. நீ நின்று ரெண்டு தடி கொத்திக் கொடுத்திட்டுப் போவன். சாயங் காலமாய் வாவன் பார்ப்பம்...''

எதையோ யோசித்து தனக்குள் திட்டம் தீட்டியவராய் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டார் சின்னத்தம்பி உடையார்.

உடையாருக்கும் சிங்கப்பூர் பென்சனியர் செல்லையாவுக்குமிடையே நெடுநாட்களாய்க் குடும்ப விரிசல். என்றைக்கு இவர் 'ரவுன் கவுன்சில்' லெக்சன் கேட்டு பென்சனியருக்கு எதிராக நின்றாரோ அன்று தொடங்கிய பூசல், இன்று வரை விட்டு விட்டு உட்புகையும் நெருப்பாக கனன்று கொண்டிருக்கிறது.

பசுபதியின் இந்தப் பிரச்சினையையே மையமாக வைத்து பென்சனியரைச் சமரசம் செய்துவிட வேண்டுமென்று திட்டம் விரிய, பென்சனியர் ஏகாந்தமாய்க் காற்று வாங்கி ஓய்வெடுக்கும் அம்மன் கோயில் குளத்தருகேயிருக்கும் ஆலமர நிழலை நோக்கி நடையைக் கட்டினார் சின்னத்தம்பி உடையார்.




சற்றும் எதிர்பாராத விதத்தில் உடையாரைக் கண்ட பென்சனியர் ஒருகணம் ஆடிப் போனவராய் தன்னை சுதாகரித்துக் கொண்டு என்ன கதைப்பதென்று தோன்றாமல் மெல்லப் புன்னகைத்தார்.

''என்ன மச்சான், ஆழ்ந்த சிந்தனையில இருக்கிறமாதிரி...'' சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் திருவாய்மலர்ந்தார் சின்னத்தம்பி உடையார்.

''ஓமப்பா...இப்படியே இருந்து கடைசிகாலத்திலை எதை வெட்டிக் கிழிக்கப் போறமென்றுதான் யோசிச்சுக்கொண்டிருக்கிறன்''

சின்னவயதில் சின்னத்தம்பியோடு ஓடியாடிச் சண்டை போட்டு ஆனந்தமாகக் கழிந்த அந்தப் பழையநாள் ஞாபகங்கள் திடீரென அவரைத் தூக்க, தன்னையறியாமலே மீண்டும் சிரித்துக் கொண்டார் பென்சனியர் செல்லையர்.

''எங்களுக்கும் வயது போட்டுது; இனி எங்கட பிள்ளை குட்டியளின்ர சிறிசுகளோட எதிர்காலம்தானே எங்களுக்கு முக்கியம். கதையோட கதையாய் .....உவன் பசுபதி என்ன உன்னோட ..''

அர்த்தபுஷ்டியோடு நெற்றியைச் சுருக்கினார் சின்னத்தம்பி உடையார்.

''...ம் ...என்ன செய்யிறது? காலம் கெட்டுப்போய்க்கிடக்கு. எங்கட தயவில வாழ்ந்ததுகளெல்லாம் இப்ப எங்களுக்கே சவாலாய் ...உனக்குத் தெரியுமா? நான் மலாயில இருக்கயுக்கை என்ர பொடியனை மடக்கி அவன் காணிவேண்டின விஷயம்? இப்ப அவரட எல்லையைக் கொஞ்சம் தள்ளிப் பெருப்பிச்சுப்போட்டன். பார்ப்பமே என்ன நடக்குதென்று ..''

''அதுசரி மச்சான், நீ அகட்டிப்போட்ட வேலி பார்க்கிறதுக்கு அப்பிடியே வெளிப்படையாத் தெரியுதெல்லே. இக்கணம் அவன் ஒரு கோடு கச்சேரி என்டு அலைஞ்சால் அவனுக்குச் சாதகமாயெல்லே போய்முடியும். உப்புடிக் கண்டது கடியதுகளுக்கெல்லாம் காணிய வித்திருக்கக்கூடாது கண்டியோ ..''

சமாதானக் கொடி காற்றில் அசைந்தாடும் திருப்தியில் அகமுக மலர்ந்தார் சின்னத்தம்பி.

''சரிதான், இப்ப என்ன செய்யச்சொல்லிறாய்? அவனால வழக்குப்பேசி மட்டும் என்னை வெல்ல முடியாது கண்டியோ ...ஏனென்றால் எல்லைக் கல்லை நான் எப்பவோ அகட்டிப் போட்டன். அது எனக்கு வலுவான சாட்சி''

பேச்சுக்கு அப்படிச் சொன்னாலும், யோசனையோடு மோவாயைத் தடவிக்கொண்டார் பென்சனியர்.

''அப்பிடியே சங்கதி? அப்ப உன்னை அசைக்கேலாது. மெய்தான், காணி உறுதியில பரப்பளவு என்னமாதிரிக் காட்டியிருக்குதோ...?'' என்று ஒரு குண்டைத் தூக்கிச் செல்லையரின் தலையிலே போட்டுக் குரூரமாகப் பார்த்தார் சின்னத்தம்பி.

''அதுதான் நானும் யோசிக்கிறன்.ஆனால் அதெல்லாம் வெண்டு போடலாம்''

வென்றுபோடலாம் என்று வாயால் சொல்லிவிட்டாலும், அந்த ஒரு விஷயம்தான் உண்மையில் பென்சனியருக்கு உறைத்தது.

''எதுக்கும் பிரக்கிராசியோட ஒருக்கால் ஆலோசிச்சுப்பார்ப்பம்; நீயும் உன் பங்குக்கு இதுக்கு ஒரு வழிகாண்லாமோ என்று யோசிச்சுச் சொல்லன் பார்ப்பம்'' என்று, சின்னத்தம்பியிடமும் ஒரு பொறுப்பை ஒப்படைத்ததான திருப்தியில் ஆயா

சமாக ஒரு நிம்மதிப்பெருமூச்சுவிட்டார் பென்சனியர் செல்லையா.

மனதுக்குள் வைத்திருந்த சுமையைப் பகிர்ந்துகொள்ள ஒரு துணை கிடைத்த மகிழ்ச்சி அவர் முகத்தில் பளிச்சிட்டது.

பென்சனியர் அந்தஒரு வார்த்தை மூலம் தமது உறவை-நெருக்கத்தை அங்கீகரித்துவிட்டார் என்ற திருப்தியில், மெல்ல எழுந்து விரல்களைச் சொடுக்கி நெட்டிமுறித்தார் சின்னத்தம்பி.

அவர் நினைத்திருந்தால், பென்சனியரின் இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு பசுபதிக்காக எதையாவது பேசி சாதகமான ஒரு தீர்வைக் கண்டிருக்கக்கூடும். மாறாக, பசுபதிக்காக வக்காலத்து வாங்கத்தான் வந்தாயா என்று பகைமைத்தீ மீண்டும் சுவாலை விட்டு வளரவும் வாய்ப்பாக இருந்திருக்கக்கூடும்.

எனவே, பசுபதியின் சொந்த விடயமான உரிமைப்பிரச்சினையைவிட செல்லையரின் நெருக்கமான உறவு முறிவடைந்துவிடாமல்இந்தளவோடாவது சீரடைந்துவிட வேண்டுமென்பதில் குறியாயிருந்த சின்னத்தம்பியாருக்கு இதுவே போதுமென்றாகிவிட்டது. நிமிர்ந்த பசுபதியின் பணிவிடைகளைவிடவும், தணிந்த பென்சனியரின் உறவே அவருக்கு மிகவும் அவசியமாகப்பட்டது.

ஊரில்இரு துருவங்களாகிப்போன பென்சனியர்-உடையார் என்ற இரு பெரும் புள்ளிகளின் இந்த அபூர்வ சந்திப்புக்காட்சியைக் கண்டு வியந்தாற்போல், வைத்தகண் வாங்காமல் விலகிப்போன இரண்டொரு மனிதரையும் கவனிக்க அவர் கண்கள் தவறவில்லை.

உடையாருக்கும் பென்சனியருக்குமிடையேயான புதிய உறவு அதற்குள் கை, கால், செட்டை வைத்து ஊருக்குள் என்னென்ன விதமாகவோ சிறகடிக்கத் தொடங்கிவிட்டிருந்தது.

அப்படி அவர்கள் என்னதான் கதைத்துக்கொண்டார்கள் என்ற ஆச்சரியம் கண்களில் தொனிக்க, அந்த இரு துருவங்களும் முகத்தில் மலர்வு பொங்கப் புதுப்பொலிவுடன் திரிவதாகவே ஒவ்வொருவரும் உணரத் தலைப்பட்டனர்.

அந்தச் செய்திகேட்டுப் புளகித்துப்போன பசுபதி, தனக்கு மட்டுமே அதன் உள்விபரம் தெரியும் என்ற பாவனையில், என்றுமில்லாதவாறான ஓர் உள்ளுணர்வு மனதை உலுக்க, உடையாரின் வீட்டை நோக்கி ஆவலோடு பயணித்தான்.

ஹோலின் வெளிவாயிற் கதவருகே ஈஸிச்செயரின் சட்டங்களில் இரு கால்களையும் பரக்க விரித்து நீட்டி, ஆரோகணித்துப் படுத்திருந்த சின்னத்தம்பி உடையாரின் வாசற்படியருகே வாயெல்லாம் பல்லாக நின்றான் பசுபதி.

'ஹாயா'கத் தான் ஓய்வெடுக்கும் வேளையிலே, வேண்டத்தகாத ஓர் விருந்தாளியைப் பார்த்தாற்போன்று நெற்றிப் புருவங்களைச் சுருக்கி, அற்பபதரொன்றைச் சுட்டெரிக்குமாப்போன்ற முனிபுங்கவப் பார்வையில் பசுபதியை அளந்தார் சின்னத்தம்பி.

''வா, உட்கார்!''

வந்தாச்சு மறுவார்த்தைக்கும் கட்டுப்படுவதா, விடுவதா என்ற கலக்கத்துடன், பலத்த எதிர்பார்ப்பு முகத்தில் தேங்க,

''ஐயா...... ஐயாவைச் சந்திச்ச தாய்...''

வார்த்தைகள் மிண்டுபிடிக்க, ஆவலும் அவசரமும் ஒருசேரப் பதறினான், பசுபதி.

சின்னத்தம்பியார் உதட்டுக்குள் சிரித்தார்.

''ஐயாவைச் சந்திச்சதையும் மோப்பம் பிடிச்சிட்டாய் போல... ம்...பந்து உன் பக்கம் தான்!''

''..பந்து.. பந்து என் பக்கமா ஐயா? அப்ப... எனக்கு...''

''அவசரப்படாத பசுபதி...அந்த மனிசனோட எல்லாம் கதைச்சுப் பார்த்தாச்சு. ஆள் உசும்புறதாய்த் தெரியல்ல. இப்ப உன்ர கையில தான் பந்து இருக்கு''

''நீங்க செல்லிறது எனக்குப் புரியல்லயே ஐயா...!''

'புரியும் படியாய்ச் சொல்லிறன் கேள். பேசாமல் வேலியப் பிடுங்கிப் பழையபடி தள்ளிப் போடு!'

'...ஐயா! ஐயா சொல்லிற மாதிரி செஞ்சாப் பொல்லாப்புத் தான் வரும். ஐயா உங்களோட....'

பேசத் தோன்றாமல் நின்றான் பசுபதி.

'நான் சொல்லிறதைச் செய் பசுபதி. அதுக்குப் பிறகு வாறதெல்லாத்துக்கும் நான் பொறுப்பு உன்னில அவர் கை வைக்க நான் விடமாட்டன்'

'ஓ.. எனக்காகப் பரிந்து பேசப் போய் ஐயா மேலும் பகையைச் சம்பாதிச்சுக் கொண்டு வந்திட்டார் போல'

நரியின் தந்திரமறியாத வெள்ளாட்டுத் தனமாக பசுபதி மனதுக்குள் பொருமிக் கொண்டான்.

பாவம், இனம் இனத்தோடு சேர்ந்து போடும் இரட்டை வேடம் அந்த அப்பாவிக்குத் தெரிய நியாயமில்லையே!

இரவு முழுவதும் தூக்கமின்றிப் போராடிய பசுபதி விடிந்ததும் ஒரு முடிவுக்கு வந்தவனாய் வருவது வரட்டுமென்ற வைராக்கியத்துடன் உடையாரின் வாக்கே தேவ வாக்காய்ச் சிரமேற் கொண்டு விடிந்தும் விடியாத அந்த காலைப் பொழுதின் கருக்கலில் கதிகால்களைப் போய்ப் பிடுங்கவும்; செல்லையர்வீட்டு சடைநாய்கள் இரண்டும் பெரிதாய்க் குரைத்து அட்டகாசம் பண்ணவும் அந்தக் களேபரம் தொடங்கியது.

காடுவெட்டும் கத்தியைத் தூக்கிக் கொண்டு கோபாவேசமாய்ச் செல்லையர் ஓடிவர, அவரைத் தாக்கவிடாமல் தடுக்கும் நோக்குடன் அவர் மனையாள் பின் தொடர்ந்து ஓடிவர, ஆண் மூச்சுடன் அவளுக்குக் கட்டுப்படாமல் முன்னேறிய செல்லையர் வேலிக் கதிகால்களையெல்லாம் தாறுமாறாக வெட்டிச் சீவி எறிந்து கொண்டே,

'வேலி என்னடா வேலி வேண்டிக் கிடக்கு? எல்லாம் என்ர நிலம் தானடா' என்று அசுரத்தாண்டவமாட; கொதியேறிப் போன

பசுபதி தன்னுணர்விழந்தவனாய் அலவாங்கைத் தூக்கி செல்லையரைத் தாக்க வைத்த குறி தவறி, செல்லையர் மனைவியின் தலையைப் பதம் பார்த்த ஒரு ரத்தக் களரியுடன் காலைப் பொழுது விடிந்தது.

'குய்யோ முறையோ' என்று செல்லையர் மனைவி போட்ட கூச்சலில் அக்கம் பக்கமெல்லாம் வந்து குழும, தன்னிலையுணர்ந்த பசுபதி பதறி நின்றான்.

மீண்டும் ஒரு ரத்தக்களரி பரவ நையப்புடைக்கப்பட்ட பசுபதி அறிவு மயங்கும் அதே வேளை, பசுபதியின் மகன், மனைவி பிள்ளைகளுடன் தான் தப்பினால் போதுமென்று சின்னத்தம்பி உடையார் வீடு நோக்கிப் படையெடுத்தான்.

சேதியறிந்து பதறிப் போன சின்னத்தம்பியார், தன் குட்டு உடைந்து எங்கே பகிரங்கமாகி விடுமோ என்ற பயத்தில் கையில் அகப்பட்ட காசைக் கொடுத்து,

'இங்கை நில்லாதை: எந்தச் சீமைக்காவது தப்பி ஓடு' என்று சொல்லி அவசரமாக அந்தக் குடும்பத்தை அப்புறப்படுத்தினார்.

'தன்னிடம் முறையிட வந்தவர்களை ஏசித் துரத்தி விட்டதாக பின்னாளில் செல்லையரோடு சமாதானம் செய்து கொள்ளலாம்' என்ற நினைப்பில் அமைதியாகி, செல்லையர் வீட்டை நோக்கி வேகமாக ஓடினார் சின்னத்தம்பி.

திருமதி செல்லையரின் அகால மரணத்தைத் தொடர்ந்து கைதான பசுபதிக்கு, அவன் பக்கமுள்ள நியாயத்தைச் சொல்லி வாதிக்க ஆள் கிடைக்கவில்லை என்று சொல்வதைவிட, விரைவான ஒரு கடுந் தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருந்தான் என்று சொல்வதே மிகப் பொருத்தமாயிருக்கும்.

அவனது இனசனத்தார் அவனை வெளியே பிணையில் கொண்டுவர மேற்கொண்ட முயற்சிகளையும் அவன் அறியாமலில்லை.

தன்னை நிர்க்கதியாக விட்டு ஓடிப் போய் விட்ட தன் பிள்ளை திரும்ப ஓடி வந்து தன்னை மீட்டெடுப்பானா?

எந்தப் பிள்ளையின் நல்வாழ்வுக்காக ரத்தம் சிந்தினானோ, அந்தப் பிள்ளையே மண்ணை விட்டுத் தலைமறைவாகி விட்டான்.

நீதிமன்றம் தனக்கு மரண தண்டனை நிறைவேற்றுமோ, ஆயுட் கைதியாக அடைத்து வைத்தே அதிகாரம் செலுத்துமோ என்பதல்ல அவனுக்குள்ள பிரச்சினை.

சொந்த மண்ணும் பறிபோய் தன் பிள்ளையும் அவன் வம்சாவழிகளும் மறுபடியும் வந்து தங்கவும் இடமின்றி அவதிப்பட நேருமோ என்று நினைக்கையிலேயே, தன் தலை சுக்கு நூறாய் வெடித்து சிதறி விடக் கூடாதா என்ற அங்கலாய்ப்பில் அவன் பெற்ற மனம் பொருமி வெடித்தது.

# சக்தி நூல் நிலையம்

உங்களுக்குத் தேவையான

★ கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் தயாரிப்புகள்

★ மாதாந்த, வாராந்த பத்திரிகைகள்

★ சகலவிதமான கொப்பி வகைகள்

★ பாடசாலை உபகரணங்கள்

★ பாடசாலைப் புத்தகங்கள்

★ காரியாலய உபகரணங்கள்

★ சினிமாப் பத்திரிகைகள்

★ எவர்சில்வர் பாத்திரங்கள்

★ நாவல்கள்

எம்மிடம் கிடைக்கும்.

# சக்தி நூல் நிலையம்

53, திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு.

☎ 065-2103.

# இலங்கைப் பெண் எழுத்தாளர்கள்

● செ. யோகராசா, M. A.

மங்களநாயகம் தம்பையா தொடக்கம் சுமதி அற்புதராஜா வரையிலான இலங்கைப் பெண் எழுத்தாளர்கள் பற்றிச் சிந்திக்கு மொருவனுக்கு இருவிடயங்கள் புலப்படலாம். இலங்கையில் ஆண் எழுத்தாளர்களுடன் ஒப்பிடும் போது பெண் எழுத்தாளர்கள் குறைந்த எண்ணிக்கையினராகக் காணப்படுகின்றனரென்பது, ஒன்று. இத்தகைய பெண் எழுத்தாளர்களில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்தவர்கள் சிறுதொகையினரென்பது மற்றொன்று

## சில அவலங்கள்

பெண் எழுத்தாளர்கள் குறைந்த தொகையினராகக் காணப்படுவது ஏன்?

பொதுவாக நோக்கும் போது, பெண் எழுத்தாளர்களது அனுபவம் குறுகிய வட்டத்துள் அடங்கி ஒடுங்கி விடுவது தெளிவாகும். அவர்கள் ஒன்றில் வீட்டில் இருக்கிறார்கள்; அன்றேல், வீட்டிலும் வேலை செய்யுமிடத்திலுமாக இருக்கிறார்கள்; தமது ஊரைவிட்டு வெளியேறாதவர்களாகக் காணப்படுகிறார்கள். இதனாலேயே காதல் பற்றியும் குடும்பம் பற்றியும் திரும்பத் திரும்ப எழுதப்படுகிறது. அதற்கப்பால் செல்வதாயின் சீதனம் முதலான ஒரு சில விடயங்களே பேசப்படுகின்றன: அவையும் மேலோட்டமாகவே அணுகப்படுகின்றன. எதுவாயினும் எழுத்தின் அடித்தளம் கனவுலகமாகவே அமைந்து விடுகிறது. இங்கு கூற வருவது யாதெனில், பெண் எழுத்தாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தங்களளவில் தங்களுக்கு எழுதுவதற்கென அதிகமாக எதுவுமில்லையென்று கருதுகிறார்கள் என்பதே.

ஆழ்ந்து அவதானிக்கும் போது எழுத்துத்துறையில் ஈடுபட்டிருக்கும் பெண் எழுத்தாளர்கள் தமது திருமணத்திற்குப் பின் தொடர்ந்து எழுதுகின்ற முயற்சியைக் கைவிட்டு விடுகிறார்கள் என்பது தெரிய வருகிறது. இன்னொரு விதமாகக்கூறின், அவர்களுக்கு இல்லறக்கதவு திறக்கப்படும் போது எழுத்துலகக் கதவு மூடப்படுகிறது. பின்னர் குடும்பம் பெருகியதும் அக்கதவினைத் திறப்பது கடினமாகிவிடுகிறது. அது மட்டுமன்று. குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட பெண் தொழில் புரிபவராயின் இரட்டைச் சுமை வேறு: ஆக, வேலைப்பளு, நேரமில்லாமை, ஊக்கப்படுத்துபவரில்லாமை என்பவற்றினால் ஆரம்ப காலத்தில் எழுத்துலகில் நுழைந்திருந்த பெண் எழுத்தாளர் ஒருவர் பின்னர்

காணாமற் போய் விடுகின்றார். மண்டூர் மீனா, பாமா சண்முகம் சகுந்தலா, கலையரசி என மட்டக் களப்பு பிரதேசத்திலே இத்தகைய பெண் எழுத்தாளர்கள் பலரைச் சுட்டிக் காட்டலாம்.

பொதுவாக, இலங்கை எழுத் தாளரைப் பொறுத்த வரையிலே படைப்புகளைப் பிரசுரிப்பதற்கான வாய்ப்பு குறைவாகும். சஞ்சிகை கள் வெளிவருவது அரிதாகவிருக் கின்ற நிலையில் தினகரனையும் வீரகேசரியையும் இலங்கை வானொ லியையும் நம்பியே ஒருவர் எழுத வேண்டிய நிலையுள்ளது. அது மட்டுமன்றி அவற்றின் சட்டதிட் டங்கள், எதிர்பார்ப்புகளுக்கமை வாக எழுத வேண்டியுள்ளது. தனிப்பட்ட செல்வாக்கினைப் பயன்படுத்த வேண்டிய நிலையும் காணப்படுகிறது. அதே வேளையில் பிரசுரமாகும் படைப்புகள் நூலு ருப் பெறுவதும் அரிதே. மூத்த தலைமுறையினரான குந்தவை முதலானோரது படைப்புகள் இன்று வரை நூலுருப் பெறா தமை இவ்விடத்தில் நினைவுக்கு வருகிறது.

எழுத்துலகில் நுழைந்துள்ள பெண் எழுத்தாளர்களுக்குச் சமூக அங்கீகாரம் இலகுவில் கிடைத்து விடுவதில்லை. சமூகம் ஆண் எழுத்தாளரையும் பெண் எழுத் தாளரையும் இருவேறு கண் கொண்டே நோக்குகின்றதென்பது நுணுகி அவதானிக்கும் போது புலப்படுகிறது. "இவருக்கு ஏன் எழுத்து?" என்று எண்ணுவது தொடக்கம் பெண் எழுத்தாளர் எதனை எழுதினாலும் அதனை அவரது தனிப்பட்ட வாழ்க்கையு டன் தொடர்பு படுத்திப் பார்ப் பது வரையில் இத்தகைய நிலை நீடிக்கிறது. தமிழ் நாட்டில் மட்டு மன்றி இலங்கையிலும் இத்தகைய போக்கு காணப்படுகிறதென்பதற்கு சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கோகிலா மகேந்திரனது நாவலொன்றின் வெளியீட்டு விழாவில் நடைபெற்ற சம்பவமொன்று சான்று பகர்கின் றதன்றோ!

பெண் எழுத்தாளர்கள் எழு தத் தயங்குவதற்கான இன்னொரு காரணமும் அண்மையில் மட்டக் களப்பில் நடந்த வெளியீட்டு விழாவொன்றில் பெண் எழுத்தா ளரொருவரினால் முன்வைக்கப்பட் டுள்ளது. விமர்சகர்கள் பெண் எழுத்தாளர்களின் குறைகளை மட்டுமே பெரிதுபடுத்தி அவர்களது படைப்புகளை ஒரேயடியாக மட் டந்தட்டி விடுகிறார்கள்; இத னால் எழுத்தாளர் மனம் பாதிப் படைகிறது என்பதே அதுவாகும். இக்கருத்தில் எனக்கு உடன்பாடில் லையாயினும் இதனையும் கவனத் திற் கொள்ள வேண்டிய ஆரோக் கியமற்ற நிலையிலேயே எமது எழுத்துலகம் காணப்படுகிறது!

இனி, அடுத்த விடயத்திற்கு வருவோம். எழுத்துலகில் நீண்ட காலமாக ஈடுபட்டு தொடர்ந்து எழுதும் பெண் எழுத்தாளர்கள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடை யாத நிலையில் காணப்படுவது ஏன்?

இலங்கை பெண் எழுத்தாளருள் தரமான நவீன இலக்கியப் படைப்புகளை வாசிப்போர் குறைவே. (இக்கூற்று பாகுபாடின்றி இலங்கை எழுத்தாளர் பலருக்கும் பொருந்துவதே). அதுவும் மட்டக்களப்பு பிரதேசத்தினைப்பொறுத்த வரையில் இது ஐயத்திற்கிடமற்றதொரு உண்மையாகும். இவ்வாறு தரமான படைப்புகளை வாசிக்காத நிலையில் முற்கூறியது போன்று அனுபவம் குறுகிய வட்டத்தில் அமைந்து விட்ட நிலையில் பெரும்பாலான பெண் எழுத்தாளரது கதைகளுக்கான ஊற்று ஒன்றில் இலங்கை வானொலி ஒலிபரப்புகள் ('இசையும் கதையும்' 'பூவையர் பூங்கா' நாடகம் முதலிய நிகழ்ச்சிகள்) அன்றேல் 'வீரகேசரியும்' 'தினகரனும்' இல்லாவிட்டால் மணியனும, ராஜேந்திரகுமாரும், பட்டுக்கோட்டை பிரபாகரனுமே.

தவிர, பெண் எழுத்தாளர் உட்பட இலங்கையின் எழுத்தாளர் பலரும் புனைகதை பற்றிய அடிப்படை அறிவும் தெளிவும் அற்ற நிலையினராவர்; இதனாலேயே இவர்கள் பலரும் 'சிறுகதை' எழுதுவதற்குப் பதிலாக 'கதை' எழுதுவதையும் 'கதை கூறுவதே நாவல்' என்று கருதுவதையும் காண்கிறோம். இத்தகு துர்ப்பாக்கிய நிலையில் சமகாலத் தமிழ் நாட்டுப் புனைகதைத் துறையிலே தற்போது வேகமாக ஏற்பட்டு வரும் மாற்றங்களை (எ-டு- மஜிக்கல் றியலிசப் போக்கு, போஸ்ட மார்ட்னிச/ பாலிம் ஸெஸ்ட் சரித்திரப் போக்கு) அறிவதுதான் எக்காலம்? அக்காலம் வரையும் இலங்கைப் புனைகதைத் துறை தேக்கமுற்ற குட்டையாகவே திகழும்!

---

சிற்றிதழ்கள் பற்றி ஒரு சிற்றிதழா? 'சிற்றிதழ் செய்தி' சிற்றிதழ்களுக்காக வெளியாகும் ஆய்வு இதழ் ''சிற்றிதழ் செய்தி ஆய்வு இதழ்'' எனப் பெயர் மாற்றம் பெற்று இருமாத இதழாக வெளிவரும் இவ்விதழ் தனிநபர் முயற்சியாகவே வெளிவருகின்றது. 'சிற்றிதழ் நூலகம்' ஒன்றினையும் தொடக்கியுள்ளமை பயன் தரும் முயற்சியாகும். நவம்பர் 1993ம் ஆண்டு வரை 1610 சிற்றிதழ்கள் சேர்ந்துள்ளதாய் அறிவிக்கும் இதழின் சிறப்பாசிரியர் பொள்ளாச்சிநேசன் 'இதழ் சேர்ப்பது வரலாறுகாட்டவே. தற்பெருமைக்காக அல்ல' என்றும் கூறுகின்றார். அவர் கூற்றுடன் உடன்பாடு கொள்வோர் தொடர்பு கொள்க 1 Sampath Nagar, Suleswaram patti, pollachi, 622006, India.

நன்றி: மௌனம்

ஆயினும், மேற்கூறிய விடயத்தினை இன்னொரு கோணத்திலும் அணுக வேண்டும். தரமான இலக்கிய படைப்புகள் எழுத்தாளர்களுக்கு இலகுவில் வாசிப்பதற்குக் கிடைக்கின்றனவா என்றொரு வினாவை எதிர் கொள்ள வேண்டிய நிலையுள்ளது. இங்குதான் பொது நூல் நிலையங்களினதும் புத்தகசாலைகளினதும் பங்களிப்பு அவசியமாகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தினைப் பொறுத்த வரையில் சிறந்ததொரு புத்தகசாலை இன்றுவரை இல்லை. மட்டக்களப்பு பொது நூலகம் தரமான அண்மைக்கால நவீன இலக்கியப் படைப்புகளை கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. எனவே மட்டக்களப்பு பிரதேச எழுத்தாளரது நிலை பரிதாபகரமானது தான். ஆயினும் இலக்கியதாகமுள்ள எழுத்தாளரொருவர் நீருள்ள இடம் நாடிச் செல்ல வேண்டுமல்லவா? தேடல் இல்லாமல் எழுத்தாளர் வளர்வது சாத்தியமானதன்று.

முக்கியமான பிறிதொரு விடயத்தையும் இங்கு வற்புறுத்துவது அவசியமாகிறது. மூத்த எழுத்தாளரான குறமகள் ஒருதடவை குறிப்பிட்டார்:

''பெண் கல்வி, பெண் விடுதலை பற்றிய கருத்துக்களை இந்தியப் பத்திரிகைகள், நூல்கள், (பாரதி, காந்தி, வி. க, முவ ஈ, வெ. ரா) என்பவற்றின் தாக்கத்தாற் பெற்று அவற்றை இரு பாலாருமே ஏற்கத் தயங்கிய காலத்தே யாவரையும் நோகடிக்காமல்குடும்பப் பாங்கான கதைகளினூடாக வருவதாகவும் கருவுக்குமெருகூட்டுவனவாகவும் வெளிக்கொணர்ந்திருக்கின்றேன்''

இன்றுங்கூட மேற்கூறிய நிலை சில விடயங்களை எழுதத் தயங்குகின்ற நிலை காணப்படுகின்றதே தவிர பெருமாற்றங்கள் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. பெண்கள் தொடர்பான சில பிரச்சனைகளைத் துணிந்து எழுதிய பெண் எழுத்தாளர் என்ற விதத்திலே பவானி ஆழ்வாப்பிள்ளை மட்டுமே குறிப்பிடத்தக்கவராகின்றார். குறிப்பாக பெண் எழுத்தாளர்களது மனோ நிலையில் மாற்றம் ஏற்படும் வரை வளர்ச்சியும் ஏற்படப் போவதில்லை.

மேலும் நீண்ட காலமாக எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்ற பெண் எழுத்தாளருட்பட பெரும்பாலான எழுத்தாளர்களது உள்ளத்தில் தவறானதொரு எண்ணம் நிலையூன்றியிருப்பதையும் அறிய முடிகின்றது. தமக்கு எல்லாமே தெரியும்; தாம் எதையுமே வாசிக்க வேண்டியதில்லை என்பதே அது.

இன்னொன்றும் கூறுதற்குள்ளது; 'எழுத்து ஒரு தவம்; எழுத்து ஒரு தாகம்; எழுத்து ஒரு பிரசவம்' என்பதனை உணர்ந்த எழுத்தாளர் வெகு சிலரே; எழுதும் விடயங்களை மனதிலே ஊறப்போட்டு வைக்காமல் நினைத்தவுடன் எழுதி அடுத்த கணம் பிரசுரத்திற்கு அனுப்பும் எழுத்தாளரே இலங்

கையிற் பலர். இதனாலும் எழுத்தாளரிடம் வளர்ச்சி ஏற்படாமல் போய் விடுகிறது.

இறுதியாக ஒன்று. எத்தகையதொரு இலக்கியப் படைப்பாயினும் அதன் ஆரோக்கியமான வளர்ச்சியென்பது அது காத்திரமான விமர்சனத்திற்குட்படும் போது தான் சித்திக்கிறது. இலங்கையின் பிற தேசங்களில் எழுத்தாளரது படைப்புக்கள் ஓரளவாவது (பெருமளவில் அல்ல) கடுமையான விமர்சனத்துக்குட்படும் போது மட்டக்களப்பு பிரதேசத்தின் நிலை மாறுபாடானது. பாராட்டே இங்கு விமர்சனமாகிவிட்ட பரிதாபகரமான நிலை! எத்தகு விமர்சனங்களையும் ஏற்கும் பக்குவம் இங்குள்ள எழுத்தாளரிடம் தோன்றும் வரை எழுத்துலக வளர்ச்சியினை முதிர்ச்சியினை எட்டுவது சற்றுக் கடினமானதாகும்.

சுருங்கக் கூறின், மேற்கூறிய அவலங்கள் நீங்கும் வரை இலங்கையிலே அம்பைகள் தோன்ற முடியாது எனலாம்.

---

இக் கட்டுரை பற்றிய வாசகர்களுடைய கருத்துக்களை எதிர்பாக்கின்றோம்.

ஆ-ர்.

---



## தாய்ப்பால் ஒரு அபூர்வ சஞ்சீவி

* மலிவானது
* வசதியானது
* பாதுகாப்பானது
* மன நிறைவை அளிப்பது
* பாசப்பிணைப்பை வளர்ப்பது
* நோய் எதிர்ப்புச்சக்தி அடங்கியது

நன்றி: சுகாதார மஞ்சரி

# விடிவு தேடி விரையும் பெண்கள்!

வாசுகி குணரத்தினம்
(கிழக்குப்பல்கலைக் கழகம், மட்டக்களப்பு.)



நிலவுக்கும் உவமை வேண்டின்
நாம்தான் வேண்டும்!
நிலவறைக்குப் பதுமை வேண்டின்
நாம்தான் வேண்டும்!

மலருக்கும் உவமை சொல்ல
நாம்தான் வேண்டும்!
மயிலின் நடை காட்டிடவும்
நாம்தான் வேண்டும்!

கயல் மீனும் பாய வழியில்லை
கயல் விழி என்றார் பெண்கண்ணை
வயல் ஒன்று சீதனமாய் இல்லையென்றால்
வடிவில்லை அவளெனக்கு என்று சொல்வார்!

சந்தன உடல்வாகு என்று சொல்வார்!
சட்டியுடன் அவள் அடக்கம் எனவும் மெல்வார்
சிந்தனை அவளுக்கு உதித்ததென்றால்
சீ...நீயும் பெண்ணா? எனக் கொதிப்பார்!

துடிபோலும் அவளிடை என்றும் சொல்வார்!
துடிக்கும் அவள் உள்ளத்தை மறந்து செல்வார்!
படிதாண்டி அவள் வந்து நின்று விட்டால்
பத்தினியே இல்லை அவள் என்றுரைப்பார்!

சீதனத்தில் விலையாகப் பெண்தான் தேவை!
சித்திரத்தில் கலையாகப் பெண்தான் தேவை!
சிவனிலும் பாதியாகப் பெண்தான் தேவை!
சிறப்பான சமையலுக்கும் பெண்தான் தேவை!

இப்போது எமக்கு விடியல் தேவை!
இனி மதிவிழி திறப்பதே எமதுவேலை!
தப்பேதும் நீர்காண முனைந்தால் சேலைத்
தலைப்பிலே முடிவோம் உமது காலை!

# விநோதமான சாதனம்

உடுவை தில்லைநடராசா

ஆனந்தனின் குடும்பம் வசிக்கும் சிறிய 'அனெக்ஸ்'சுக்கு முன்பாக வானொன்று நின்று புறப்படும் சத்தத்தைத் தொடர்ந்து ஆனந்தனின் குரல் ''நான் போயிட்டு வாறன்''

கண்களையும் கையையும் அசைத்த மீனாவின் உதடுகளும் அசைந்தன. ''போயிட்டு வாங்கோ''

ஆனந்தனை உள்ளே இழுத்துக்கொண்ட வான் கட்டுநாயக்க விமான நிலையத்தை அடைந்தபோது - அவன் நண்பன் நாதனைச் சுமந்து வந்த விமானம் தரையிறங்கியது.

ஆனந்தனும் நாதனும் இருபது வருடங்களுக்கு முன் ஒரே நாளில் ஒன்றாக எழுதுநர்களாக நியமனம் பெற்றவர்கள். சாதாரண வாழ்க்கையில் திருப்தியையும் நிம்மதியையும் காணும் ஆனந்தன் மீனாவின் கணவனானான். துடியாட்டமாகத் திரிந்த நாதன் கண்டியிலுள்ள பணக்கார வீட்டுத் தொடர்பால் 'பத்மா'வைக் காதல் மனைவியாக்கிக் கொண்டான்.

வசதிக்கு மேல் வசதிகளைப் பெறவேண்டும் - பெருக்க வேண்டுமென்பது நாதன் - பத்மா தம்பதிகளின் எண்ணம். அதனால் எழுதுநர் வேலையை விடுத்து வெளிநாடு சென்றவன் தேடிய பொருட்களோடு ஆனந்தன் வீட்டில் நுழைந்தான். பெரிய பெட்டிகளோடு சில்லுகள் பூட்டிய இராட்சத சூட்கேஸ்களும் நுழைந்தன.

இராட்சத சூட்கேஸ்களின் மூடிகள் திறக்க உள்ளே பலவகையான விசித்திரமான - விநோதமான சாதனங்கள். நாதன் வெளிநாட்டு அனுபவங்களை விபரித்தான்.

''அங்கை கொஞ்சம் பிஸியான லைவ் எண்டாலும் சுதியான வாழ்க்கை. ஒண்டுக்கும் கஷ்டப்பட வேண்டியதில்லை. ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு மிஷின். சும்மா பட்டனை அமத்தினால் காணும். அதுகள் தானாக எல்லா வேலையையும் செய்து முடிக்கும்''

ஆனந்தனின் தலை அசைந்தது - 'ம்'

நாதன் ஒரு சிறிய பெட்டியை ஆனந்தனுக்குக் காட்டினான். பெட்டியில் சுடுநீர் போத்தல் ஒன்றின் மத்தியில் மணிக்கூடு பொருத்தப்பட்டிருந்தது. நாதன் சொன்னான்.

''இதிலை சீனியையும் கோப்பித்தூளையும் போட்டு தண்ணியை விட்டிட்டு, மணிக்கூட்டை நாலுமணிக்கு 'செற்' பண்ணிப் போட்டு படுத்திடுவன். சரியாக காலமை நாலு மணிக்கு ''கிறிங்... கிறிங் ... எண்ட சத்தம். எழும்பினால் இந்த பிளாஸ்கிலை கோப்பி சுடச்சுட ரெடியாக இருக்கும். கோப்பியைக் குடிச்சிட்டு வருவன்''

'சாப்பாடு என்ன மாதிரி? - ஆனந்தனின் கேள்வி.

நாதன் அடுத்த பெட்டியைத் திறந்தான். 'இதுக்குப் பேர் பூட் புறோசெசர் (Food Processor) இறைச்சி மரக்கறியளை தானாக வெட்டி அடுத்த பாத்திரத்திலை தட்டி விடும். காஸ் குக்கரிலை வைச்சால் நாலைஞ்சு நிமிஷத்தில் சாப்பாடு ரெடி''

ஆனந்தனின் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன...... 'ஆ'

'அங்கை பார்' - நாதனின் கைகள் காட்டிய மூலைக்கு ஆனந்தனின் விழிகள் சென்றன.

நாதன் விபரித்தான். 'லேட்டஸ்ட் வோசிங் மிஷின். ஊத்தை உடுப்புக்களைப் போட்டு பட்டனைத் தட்டி விட்டால் அப்பிடியே அலம்பி... இதிலை ட்ரையரை அமத்தினால் உடுப்புக்கள் காய்ந்து வெளியாலை வரும். இதிலை தான் கவனமாக இருக்க வேணும். டக்டக் எண்டு அயன் பண்ணித்தர கடகட எண்டு எடுக்க வேணும். அல்லது உடுப்புக்கள் சிக்குப் பட்டுப் போகும்''

### தற்கொலை

ஒவ்வொரு நாளும் இலங்கையில் 25 பேர் தற்கொலை செய்கிறார்கள். 16 முதல் 30வரையுள்ள வயதினரே பெரும் பாலும் தற்கொலை செய்கின்றனர்.

1989ம் ஆண்டில் தற்கொலை செய்த 7720 பேரில் 3260பேர் 16 – வயதினராவர். 7000 பேரில் 2000பேர் பெண்கள் 2150 பேர் காதலில் தோல்வியடைந்தவர்கள். 600 பேர் மன நோயாளிகள்.

நன்றி: சுகாதார மஞ்சரி

ஆனந்தன் தான் போட்டிருந்த சட்டையை ஒரு தடவை பார்த்தான். சாதாரண அயன் பொக்ஸ் கூட அவன் வீட்டில் இல்லை.

மீனா உணவு தயாரிப்பதெல்லாம் மண்ணெண்ணை அடுப்பில் தான். அது ஒரு சிறிய சப்புப் பலகையினாலான மேசையில் கொலு வீற்றிருந்தது. அதை அடுத்த றாக்கையில் அலுமினியம் செறமிக்ஸ் பொருட்கள் கொஞ்சம் அதற்கு மேலிருந்து சுவரில் ஒருசிறு ட்ரான்சிஸ்டர் ரேடியோ - ஆனந்தன் வேலைக்குச் சேர்ந்து சில மாதங்களின் பின் கடன் வாங்கிக் கொள்வனவு செய்தது.

நாதன் கேலியாகச் சிரித்தான். 'நீ இன்னும் அந்தப் பழைய ரேடியோவைக் கைவிட இல்லை? ''ஆனந்தனும் பதிலுக்குச் சிரித்தான் ''ரேடியோ மட்டுமில்லை. இப்படி இன்னும் கன பொருட்கள்''

நாதன் அந்தப் பெட்டியைத் திறந்தபடி சொன்னான் இது மல்ரி என்ரரெயினர். ஆனந்தனின் சந்தேகம். 'அப்படியெண்டால்' ரேடியோ ரி. வி. டேப் ரெக்கோடர் எல்லாம்' என்ற வண்ணம் நாதன் ஒரு பட்டனை அமத்தியதும் இனிய பாடல் ஒலிக்க ஆரம்பித்தது.

நாதனின் கேள்வி: 'அது சரி உன்னட்டை இதுகள் ஒண்டும் இல்லையா?'

கேள்வி முடியுமுன்னரே பாடலும் தடைப்பட்டது. விளக்குகளும் அணைந்தன 'கறண்ட் இல்லைப் போலை இருக்கு' என நாதன் சொல்லு முன்பு ஆனந்தன் சொன்னான். நாதன் கறண்ட் இல்லாட்டி மேல் நாட்டுச் சாதனங்கள் ஒன்றுமே இயங்காது. ஆனால் இங்கை 'இதுகள் எல்லாத்தையும் விட ஒரு அற்புதமான சாதனம் ஒண்டு இருக்கு. அது ஒல் இன் வண். அது எல்லாம் செய்யும். கறண்ட் இல்லாவிட்டாலும் தன்ர பாட்டிலை எல்லாம் செய்யும்'

நாதன் ஆச்சரித்தேயாடு ஆனந்தன் காட்டிய இடத்தைப் பார்த்தான்.

அந்த சாதனம் புட்டு அவிப்பதற்காகக் குழைத்த மாவை உருட்டி புட்டுக் குழலின் உள்ளே போட்டுக் கொண்டிருந்தது.

நாதன் மீண்டும் பார்த்தான். அந்த ஒல் இன் வண் இப்போது வீட்டைத் துப்பரவு செய்ய ஆரம்பித்தது. ஆனந்தனின் பூட் புறோசரும், வக்கியூம் கிளீனரும், வோசிங் மெசினும் அவன் மனைவி மீனா தான்.

இப்படி இன்னும் எத்தனையோ அலுவல்களைச் செய்யும் வினோதமான விசித்திரமான சாதனங்கள் இங்கேயும் இருக்கின்றன. என்பதை ஆனந்தன் போன்றோர் அறிவர். அறியாமலும் சிலர்.

# இராமபிரான், இலக்குவனுக்குத் தமிழிலும் அறிவுரை கூறினார்

அகளங்கன்

ஆதி காவியமாகிய இராமாயணத்தைத், தவ முனிவர் வான்மீகி, தேவபாஷையாகிய சமஸ்கிருதத்தில் பாடினார். தமிழ்த்தாய் நோன்பிருந்து பெற்றெடுத்த அரும் பெறற் புதல்வராகிய கவிச்சக்கரவர்த்தி கம்பர், வான்மீகியின் இராமாயணத்தைத் தமிழில் பாடினார்.

கவிச் சக்கரவர்த்தி என்று புவிச் சக்கர வர்த்திகளினாலும், அறிஞர்களினாலும் பெரிதும் போற்றிப் புகழப்பட்ட கம்பன் பாடிய இராமாயணக் காவியத்திற்கு இணையான காவியம், எம்மொழியிலும் இல்லை என்பர் பன்மொழி அறிஞர்.

''கம்பன் பிறந்த தமிழ்நாடு'' என்றும், ''கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்'' என்றும், ''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்......'' என்றும், ''எல்லையொன்றின்மை எனும் பொருள் தனைக் கம்பன் கவிகளால் காட்டிட முனைவதும்......'' என்றெல்லாம் கம்பனது புலமையையும் பெருமையையும் மகாகவி பாரதியார் போற்றிப் புகழ்ந்து கூறுகிறார்.

கம்பன் தனது இராமாயணத்தில், வான்மீகியின் கதாபாத்திரங்களை எல்லாம் தமிழர்களாகக் காட்சியளிக்கும் படி செய்த சாதனை பெரிதும் பாராட்டப் படக்கூடிய தொன்று.

வான்மீகியின் அயோத்தியைக் கம்பன் சோழநாட்டை நினைத்துக் கொண்டே புகழ்வான். வான்மீகியின் கங்கா நதியைக் கம்பன் சோழ நாட்டுக் காவிரி நதியை நினைத்துக் கொண்டே வர்ணிப்பான்.

இப்படித் தமிழ் மணங்கமழத் தமிழ் நாட்டில் நடந்த கதை போலவே கருதும் படியாக இராமாயணத்தைக் கம்பன் பாடிய செயல் கருத்தூன்றிக்கற்போரைப் பரவசத்தில் ஆழ்த்த வல்லது.

இராமனின் முடிசூட்டு விழாவிற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் மந்தரையின் போதனையால் மனம் மாறிய கைகேயி, தனக்குத் தருவதாக முன்பு சம்பராசுர யுத்தத்தின் போது வாக்களித்த இருவரங்களையும் தரும்படி தசரதரிடம் கேட்கிறாள்.

ஒரு வரத்தால் பரதன் மணிமுடி சூடி அரசாள வேண்டும். மறுவரத்தால் இராமன் சடாமுடி புனைந்து காடேக வேண்டும் என்ற கடுமையான அவ்விருவரங்களையும் வற்புறுத்திப் பெற்று விடுகிறாள்.

இராமனை அழைத்துத் தான் பெற்ற வரங்களைக் கூறி அவனைக் காட்டுக்குச் செல்லும்படி கூறிவிடுகிறாள். இராமன் மகிழ்ச்சியோடு அன்றலர்ந்த செந்தாமரையினை வென்ற பிரகாசமான முகத்தோடு காட்டுக்குச் செல்லத் தயாராகிறான்.

இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும். பரதன் நாட்டை ஆள வேண்டும் என்ற செய்தியைக் கேட்டு இலக்குவன் கடுங்கோபங் கொள்கிறான். தனது வில்லையும் அம்புகளையும் எடுத்துக் கொண்டு தெருவிலே வந்து நின்று வில் நாணைத் தட்டி ஒலி எழுப்புகிறான்.

அவன் சீறாமல் வேறென்ன செய்வான்.

மும்மூர்த்திகளே வந்தெதிர்த்தாலும் என் வில்லாற்றலால் அவர்களை வென்று, இராமனுக்கே இராச்சியங் கொடுப்பேன், இதைத் தடுக்க யாராலும் முடியாது என்று கர்ச்சிக்கிறான்.

இலக்குவனின் கோபத்தைக் கண்டு இராமர் அவனைச் சாந்தப்படுத்த வருகிறார். யாராலும் அடக்க முடியாதபடி நிற்கும் இலக்குவனின், கொழுந்து விட்டெரியும் கோப நெருப்பை இராமபிரானின் வார்த்தைகளென்னும் தண்ணீர் அணைக்கின்றது.

அண்ணன் இராமன் முன்னே கைகட்டி, வாய் பொத்தி அமைதி

### திரும்பி வரும் ஆயுதம்

ஆங்கிலத்திலே 'பூமராங்' என்று சொல்லப்படும் ஒரு ஆயுதம் இருந்தது. மரத்தினாலே செய்யப்பட்ட ஒருவித கோணலான ஆயுதம் இது. இது செய்யப்பட்டிருக்கும் அமைப்பில் ஒரு விசேஷதன்மை என்ன வென்றால் இலக்கு வைத்து இவ்வாயுதம் வீசப்பட்டதும் அதுபோய் தாக்கிவிட்டுப் பழைய இடத்திற்கேதிரும்பிவரும் புராணக் கதைகளில் படிக்கும் அஸ்திரங்கள் ஞாபகத்திற்கு வருகிறதல்லவா?

சிங்கக் குட்டிக்குப் போட வேண்டிய இறைச்சியைச் சிறு நாய்க்குட்டிக்குப் போட்ட செயல் இந்தச் செயல் என்று சீறுகிறான் இலக்குவன். ஆதி சேடனின் அம்சமானயாக நிற்குங் குணங் கொண்ட இலக்குவன், அன்று அண்ணனோடு எதிர்த்துரையாடுமளவுக்கு கோபாவேசங் கொண்டவனாய்க் கொதிக்கிறான்.

அவனைச் சமாதானப் படுத்துவதற்காக இராமன் பல அறிவுரைகளையும் கூறுகிறான். நதியிலே நீர் இல்லாது போனால் அது நதியின் பிழையன்று விதியின் பிழை. அதே போல் தந்தை தசரதரின் பிழையோ, தாய் கைகேயின் பிழையோ அல்ல. இது எனது விதியின் பிழை என்று பல நியாயங்களையும் கூறுகிறான் இராமன்.

இப்படித் தேவபாஷையாகிய சமஸ்கிருதத்தில் பல வகையாகவும் புத்திமதி கூறிய இராமன் இலக்குவனின் கோபத்தை ஆற்றுவதற்காகத் தமிழிலும் அறிவுரை கூறுகிறான் என்கிறார் கம்பர்.

பல மொழிகளில் பாண்டித்தியம் படைத்தவர்கள் பேசும் போது அல்லது எழுதும் போது வேற்றுமொழிக் கருத்துக்களைக் கதைகளை உதாரணங்களை அம்மொழியிலேயே சொல்லி விளக்குவது இக்காலத்தும் வழக்கமாக இருக்கிறது.

அது போலவே இராமன் தமிழ் மொழியை நன்கு கற்றவன். அதனால், இலக்குவனைச் சமாதானப் படுத்துவதற்காகத் தமிழ் மொழியிலுள்ள நல்ல ஒழுக்கக் கருத்துக்களை அறிவுரைகளை, எடுத்துச் சொன்னான் என்கிறார் கம்பர்.

''நன்சொற் கடந்தான் டெனை
நாளும் வளர்த்த தாதை
தன்சொற் கடந்தெற் கரசாள்
வது தக்க தன்றால்
என்சொற் கடந்தால் உனக்கு
யாதுளது ஈனமென்றான்
தென்சொற் கடந்தான் வட
சொற்கலைக்கு எல்லை தேர்ந்
தான்.''

நல்ல இனிமையான அன்பு வார்த்தைகளைக் கூறி நம்மை வளர்த்த தந்தையின் சொற்களை மீறி அரசாளுதல் எனக்குத் தகுதியானதல்ல. அதே போல என் சொற்களை மீறி நடத்தல் உனக்கும் தகுதியானதில்லை அன்றோ என்று தென் சொற்களில் அறிவுரை கூறினான். வட மொழியாகிய கடலின் கரைகண்ட இராமன் என்பது இப்பாடலின் திரண்ட உட்பொருள்.

தென் சொற்கள் என்பது தென் மொழியைக் குறிக்கும். தென் மொழி என்பது தமிழ் மொழியே என்பது உரையாசிரியர்கள் கருத்து. (தென் சொற்கள் + தந்தான், தென் சொற்கடந்தான்)

இராமனுக்கு தமிழ் நன்றாகத் தெரியும். இராமனை விட்டு இணை பிரியாமல் சேர்ந்திருந்து கல்வி கற்றதனால் இலக்குவனுக்கும் தமிழ் மொழி மிக நன்றாகத் தெரியும். அதனால் இராமன் இலக்குவனுக்கு அறிவுரை கூறும் போது தமிழ் மொழியிலும் அறிவுரை கூறினான் என்பது பொருந்துவதே.

புத்தி சொல்வதற்கேற்ற சிறந்த நல்ல கருத்துக்களைக் கொண்ட மொழியையுடைய தமிழர்களாகிய எங்களுக்கு இப்போது புத்தி சொல்லவும் வழி நடாத்தவும் வேறுமொழி தேவைப்படுகிறது. எங்கள் நிலை எவ்வளவு இழிவாக இருக்கிறது பாருங்கள்.

# படையல்

(படித்துச் சுவைத்த சிறந்த நூலின் அறிமுகப் பக்கம்)

அலெக்ஸி ஹேலியின்,

ஏழுதலை முறைகள் (Roots என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளிவந்த நூலின் தமிழ்ச் சுருக்கம்)

மௌ. சித்தார்த்தன்.

அமெரிக்காவில் படிக்கத் தெரிந்த ஒவ்வொரு மனிதனும் ஏழுதலைமுறைகள் என்னும் நூலை பணம் கொடுத்து வாங்கிக் கொண்டான் படிப்பறிவில்லாத ஒவ்வொரு கருப்பனும் இதை வாங்கி பைபிளைப் போல் தன் வீட்டில் பத்திரப்படுத்திக் கொண்டான். தனது முன்னோர்கள் புரிந்த கொடுமைகளுக்குத் தலைகுனிந்த ஒவ்வொரு வெள்ளையனின் கண்களும் இந் நூலின் பக்கங்களில் சிக்கிக் கொண்டன.

அலெக்ஸி ஹேலியினால் எழுதப்பட்ட ஏழுதலைமுறைகள் (Roots) என்ற நாவல் இருண்ட கண்டம் என்றும் காட்டு மிராண்டிகள் என்றும் வெள்ளையரால் அழைக்கப்பட்ட ஆபிரிக்காவையும் கறுப்பு இனத்தவரையும் பற்றிச் சொல்கின்றது.

அவர்களிடமிருந்து எவ்வாறு ஒரு செழுமைமிக்க கலாசாரம் இருந்தது என்பதையும் அவ் இனத்தின் மனித நேயத்தையும் கூறுவதுடன் அவைகள் எவ்வாறு வெள்ளையரின் வருகையினாலும் அவர்களின் காட்டுமிராண்டி நடவடிக்கைகளினாலும் சீரழிக்கப்பட்டன என இந்நாவல் கூறுகின்றது. ஆபிரிக்காவில் இருந்து கறுப்பு அடிமைகளை வாங்கி அமெரிக்காவுக்குக்கொண்டு செல்வது பதினேழாம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது. பலாத்காரமாக இவர்கள் கடத்திக் கொண்டு செல்லப்பட்டதையும், அடிமைகளாக எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பதையும்,கருப்பர்களின் ரத்தத்தாலும் வேர்வையாலும் உழைப்

பாலும் வெள்ளையர்களின் வயல்கள் செழித்துக் குலுங்கியதையும், கறுப்பினக் குடும்பங்கள் வெள்ளை எஜமானர்களினால் சிதைக்கப்பட்டதையும், பிரிக்கப்பட்டதையும் இந்நூல் அற்புதமாகக் கூறுகின்றது. ஏன் அவர்களின் பெயர் கூட வெள்ளையர்களினாலேயே தீர்மானிக்கப்பட்டன என்பதைக் காட்டுகின்றது, அவர்களுடைய தனித்துவ அடையாளங்கள் வெள்ளையரால் அழிக்கப்பட்ட போதும் எவ்வாறு கறுப்பின மக்கள் அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சித்தார்கள் என ஹேலி சுவாரசியமாகக் கூறுகின்றார்.

மேற்கு ஆபிரிக்காவின் காம்பிரியா நாட்டில் உள்ள சிற்றூர் ஜப்பூர். அங்கு ஒரு நாள் காலை பிறக்கும் குழந்தை குண்ட்டா: அவனுடன் கதை ஆரம்பித்து அவனின் ஏழாம் தலைமுறையான அலெக்ஸ் ஹேலி இந் நூலை எவ்வாறு எழுதினர் எழுதவதற்கு ஏன் தூண்டப்பட்டார் என்பதுடன் இக் கதை முடிவடைகின்றது. அலெக்ஸ் ஹேலி தனது வேர்களைத் தேடிப் போகின்றார். இதற்கு அவர் எடுத்துக் கொண்ட வருடங்கள் பதினைந்து. பல மனிதர்கள், பல நாடுகள், பல ஆராய்ச்சி நிலையங்கள், புத்தகசாலைகள், புராதன சுவடிகள், காப்பகங்கள் என்பவற்றில் தனது வாழ்க்கையின் பதினைந்து வருடங்களைச் செலவிட்டு தமது முப்பாட்டனாரின் முப்பாட்டனாரின் பூர்வீகத்தை அறிந்து காம்பிரியாவிற்குச் சென்று தன் இனத்தை கண்டு எழுதிய நாவல் ஏழுதலை முறைகள். முப்பாட்டனாரின் முப்பாட்டனாரை அமெரிக்காவுக்குக் கொண்டு வந்த கப்பலைப் போன்ற ஒரு கப்பலில் ஹேலி பிரயாணம் செய்து உணர்ந்து அதைக் கதையாக வர்ணிக்கின்றார். பதினைந்து வருட உழைப்பு இந்நூலில் தெரிகின்றது.

ஆங்கிலத்தில் எழுநூறு பக்கங்களையுடைய இந்நாவல் தமிழில் சுருக்கி நானூற்று இருபத்தெட்டுப் பக்கங்களாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சுருக்கி மொழி பெயர்ப்பு செய்த போதும் நூலின் கருத்து, கதை கூறலின் விசேட அம்சங்கள் பாதிக்காத வகையில் மிகச் சிறந்த மொழி பெயர்ப்பாக இந்நூல் தமிழில் வந்துள்ளது. மொழி பெயர்ப்பாளர் ஆ. ஜி. எத்திராஜிலு. வெளியீடு; சவுத் ஏசியன் புக்ஸ். தமிழ் வாசகர்களால் இந்நூல் கட்டாயம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

கிடைக்கும் இடம்:

**சவுத் ஏசியன் புக்ஸ்**
**கொழும்பு - 11**

---

Roots என்ற பெயரில் இந்நாவலின் கதை தொலைக்காட்சியில் தொடராக ஒளிபரப்பப்பட்டதை வாசகர்கட்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

பல துறைகளையும் சார்ந்த குறிப்பிடத்தக்க நூல்களைப் படித்துச் சுவைக்கும் வாசகர்களிடமிருந்து இப் பகுதிக்கு விடயதானங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆசிரியர்

---

*With Best Compliments from*

இளம்பிறை அச்சகம்

**Ilampirai printers**

ඉළම් පිරයි ප්‍රින්ටර්ස්

*PRINTERS, PUBLISHERS AND BINDERS.*

63, Trinco Road,

BATTICALOA.

# நிகழ்வுகள்

## மட்டு நகரில்

கவிஞர் மகாகவியின் புதிய தொரு வீடு பாநாடகம் 6 4-94 புதன்கிழமை கிழக்குப் பல்க லைக் கழக நுண்கலைத் துறை யினரால் மட்/இந்துக் கல்லூரி மண்டபத்தில் மேடையேற்றப் பட்டது. பேராசிரியர் எஸ்.சந் தானம் (துணைவேந்தர், கி.ப. கழகம்) அவர்கள் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டார்.

★

சிவரமணி கவிதைகள் நூல் வெளியீடு பெண்கள் ஆய்வு வட் டத்தினால் மட்டக்களப்பு அர சினர் ஆசிரியர் கலாசாலையில் 27-03-94 ஞாயிறு நடாத்தப் பட்டது. கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி. அம்மன் கிளி முருகதாஸ் அவர்கள் தலை மை வகிக்க வாசுதேவன் நூலை அறிமுகம் செய்தார்.

கியலும்' என்ற தலைப்பில் அண் மையில் யாழ். நாவலர் கலாச் சார மண்டபத்தில் இரு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது. முதல் நாளன்று யாழ். நாடக அரங்கக் கல்லூரி அதிபர் குழந் தை ம. சண்முகலிங்கம் கலந்து கொண்டு உரையாற்றினார். இரண்டாவது நாள் அமர்வில் பேராசிரியர். கா. சிவத்தம்பி அவர்கள் சிறப்புரை நிகழ்த் தினார்.

## திருமலையில்

திருமதி. சாரதா ஸ்ரீஸ்கந்த ராசா அவர்கள் எழுதிய 'நடனம்' எனும் நூல் வெளி யீட்டு விழா அண்மையில் திரு கோணமலை ஸ்ரீகோனேஸ்வர இந்துக்கல்லூரி சம்பந்தர் அரங் கில் நடைபெற்றது. பண்டிதர் இ. வடிவேல் தலைமை தாங்க கிழக்கு மாகாண கல்வி

தேசிய தமிழ் சாகித்தியவிழா விலே தமிழ்மணிப்பட்டம் பெற்ற எஸ். தில்லைநடராசா, நா. தர் மராஜா (அகளங்கன்) ஆகியோர் அண்மையில் வவுனியா இந்து இளைஞர்சங்கத்தினால் தங்கப்ப தக்கம் சூட்டி கௌரவிக்கப்பட் டார்கள். இவ்விழாவில் நஹியா இரா. நாகலிங்கம் (அன்புமணி) ஈழத்து சிவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மலையகத்தில்

தோட்டப் பிரதேசங்களுக் கான கூட்டுச் செயலகம் வெளியி டும் 'குன்றின் குரல்' சஞ்சிகை யின் ஆசிரியர் அந்தனி ஜீவா அவர்களினால் கண்டி சந்தியோ தய மண்டபத்தில் மார்ச் 17ம், 18ம்திகதிகளில் நாடக தொலைக் காட்சி பிரதி எழுதுவதற்கான பயிற்சிப் பட்டறை நடாத்தப் பட்டது. இந்நிகழ்ச்சியில் சுபமங் களா ஆசிரியர் கோமல் சுவாமி நாதன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## மற்றும் சில...

குரும்பசிட்டியைச் சேர்ந்த செல்வி.ராதிகா சிவபாதசுந்தரத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் 27-03-94 ஆம் திகதி ராமகிருஷ்ண மண்டபத்தில் இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் திரு. பீ. பீ. தேவராஜ் தலைமையில் நடைபெற்றது. இவர் சென்னை அடையாறு திரு. தனஞ்சயன் தம்பதிகளின் மாணவியாவார்.

★

பத்மா சோமகாந்தனின் கடவுளின் பூக்கள் சிறுகதைத்தொகுதி வெளியீட்டுவிழா 13-3-94ம் திகதி இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றது. 1950களிருந்து புதுமைப் பிரியை என்ற பெயரில் இதுவரை 40 க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதி பரிசுகள் பல பெற்றவர்.

## யாழ்நகரில்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் மணிவிழா நிகழ்ச்சியின் ஐந்தாம் தொடர் 'நாடகமும் அரங்

... திரு சி. சடாட்சரசண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

★

செல்வி அபிராமி பற்குணத்தின் நடன அரங்கேற்றம் திருகோணமலையில் புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கலாநிதி, எஸ் மௌனகுரு அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இதனை யொட்டி மலரொன்றும் வெளியிடப்பட்டது.

## வவுனியாவில்

திரு. ஓ. கே. குணநாதனின் நகைச்சுவைக் கதைகள் நூல் வெளியீட்டு விழா அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது. உதவிக் கல்விப்பணிப்பளார் திரு.எஸ்.நவரட்ணராஜா தலைமைதாங்க அரசாங்க அதிபர் திரு. எஸ். தில்லைநடராசா, அன்புமணி, அகளங்கன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

★

... ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் அவர்கள் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தார். இவர் கொழும்பு, மட்டக்களப்பு, கண்டி, மலையகம் (பல இடங்கள்) திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிற்கெல்லாம் சென்று பல வகையான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

★

புனித ஆனாள் கலைஞர் வட்டம் ஏற்பாடு செய்திருந்த நவரச இரவு நிகழ்ச்சி மன்னாரில் நடைபெற்றது. வங்காலைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு கலைத்தொண்டாற்றி வரும் கலைஞர்கள் சிலர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்கள். விழாவில் நாடகம், நாட்டுக்கூத்து, பரத நாட்டியம் போன்ற பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

தொகுப்பு:

துரை - நடேஸ்

உதயத்திற்கு எமது வாழ்த்துக்கள்

பஃற்றிமா பிரின்டர்ஸ்

அழகிய, புனிதமான

அச்சுவேலைக்கு

தொடர்பு கொள்ளுங்கள்

# பஃற்றிமா பிரின்டர்ஸ்

31, திருமலை வீதி,

மட்டக்களப்பு.

# பயணம்

திக்கவயல்

கி. தர்மகுலசிங்கம்

1990ம் ஆண்டு, அப்போது வவுனியாவுக்கு அப்பாலும் ரயில் தண்டவாளங்கள் இருந்தன. ரயில் காங்கேசன்துறை போகாவிட்டாலும் யாழ்ப்பாணத்துக்குப் போய் வந்தன. நான் கொழும்பு போவதற்காக யாழ்ப்பாணத்தில் ஏறினேன். அந்தக் கொம்பாட்மெண்டிலே எனது நண்பனும் ஏறினான். அவன் சாதாரண நண்பனா? என்னுடன் 3 வருடம் பல்கலைக்கழகத்திலே படித்தவன். பெயர் நாதன் 8 வருட இடைவெளிக்குப் பின் அவனைக் கண்டேன் என்றால் சொல்லவும் வேண்டுமா? கதை சங்கிலிப் பின்னல் போல் தொடர்ந்து சென்று கொண்டிருந்தது வவுனியாவை ரயில் வந்தடைந்தது. பழைய கதைகள் முடிந்த பாடாக இல்லை.

நாதன் தன்னைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டான். 4 வருடங்கள் இங்கிலாந்தில் இருந்த அவன் மருதானை தேவனம்பிய தீசன் றோட்டில் புதிய வீடு வாங்கி விட்டதாகச் சொன்னான், நான் அவனுடன் கைகுலுக்கினேன், அத்துடன் அவன் விட்டானா? நான் அரசாங்க சேவையில் இருப்பதைக் கேலி பண்ணி இப்போதும் 3000 ரூபாய்கள் சம்பளம் எடுப்பதையிட்டு மிகவும் வேதனைப்பட்டான்; ஆனால் நான் ரயில்வே கோப்பிச் சாலையில் (Buffet)காசு கொடுத்து கோப்பி வாங்கிக் கொடுத்தபோது அவன் ஒரு ஒப்புக்காக வேனும் தனது சட்டைப் பொக்கட்டில் இருந்து காசை எடுக்கவில்லை.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது. எமது மனதின் எண்ணப் பாடுகளும் மத்தாப்புக்களாகச் சிதறி வெடித்தன. ''மிஸ்டர் நாதன்... ஆஞ்சனா எண்டொரு மானிப்பாய்ப் பெட்டை எங்களோடை படிச்சவள், அவள் இப்ப என்ன ஆனாள்? ஏதாவது தெரியுமா?'' ''அவள் படிக்கையுக்கையே கொஞ்சம் திமிர் பிடிச்சவள். இப்ப பாங்க் மனேச்சர் ஒருத்தனைக் கல்யாணம் செய்திருக்கிறாள்; ஒரு பேபி இருக்குது. போன பயணம் கூட அவளைக் காலிமுகக் கடற்கரையிலை கண்டன். புருஷனோடை போகையுக்கை ஒரு சைட் வியூவிலை என்னைப் பார்த்ததும் பாராததும் போலை போயிட்டாள்.''' 'விட்டுத் தள்ளு; அவளின்ரை புருஷன் ஒரு சந்தேகப் பிராணியாக இருக்கலாம் என்றேன்''

ரயில் வேகமாக ஓடி மாகோவை வந்தடைந்தது. அப்போது செவ்

**உங்கள் பயண அனுபவங்களை எழுதி அனுப்புங்கள்.**

ஆ-ர்

விளநீர் விற்கும் வியாபாரிகள் அங்கு கூடினார்கள். இரண்டு செவ்விளநீர் களை வாங்கினேன். நண்பன் நாதனிடம் ஒன்றைக் கொடுத்தேன். அப்போதும் நானே பணம் கொடுத்தேன். அவன் எனக்காக ஏதும் செய்வான் போலவே தெரியவில்லை! அவன் சொன்னான் ''நான் வாங்கியிருக்கிற புது வீட்டு முற்றத்திலை இரண்டு செவ்விளநீர் மரம் இருக்கின்றது. வீட்டுக்கு வந்தால் இளநீர் வெட்டித்தருவேன். கையாலேயே புடுக்கலாம்'' என்றான். ரயில் மிக வேகமாக ஓடியது. பழைய பல்கலைக்கழகக் கதைகள், பகிடிகள் யாவும் தொடர்ந்தன.

ரயில் வியாங்கொடையை அண்மிக்கும்நேரம் மின்னல்கீற்றுப்போல ஒரு யோசனை பளிச்சிட்டது. இன்று ஹோட்டலிலே தங்குவதற்கு ரூபா 150 தேவை. நண்பன் புதிய வீடு மருதானையிலே இருக்கின்றது. பாரதி பாடியது போலப் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள் முற்றத்தில் இல்லையென்றாலும் இரண்டு மரங்கள் இருப்பதாகச் சொல்கின்றான். போய்ப்பார்ப்போமே'' நாதனின் முகத்தைப் பார்த்தேன். அவன் பழைய நாதனாக வஞ்சகம் இல்லாத முகபாவத்துடன் காணப்பட்டான். நெஞ்சில் அடக்கியிருந்த ஆசையைக் கேட்டு விட்டேன். அவன் உடனே பதில் சொல்லாவிட்டாலும் வா... வா... ஆட்சேபனை இல்லை என்றான். நான் எடுத்த டிக்கட் கொழும்பு கோட்டை வரை செல்லுபடியாகும்.

நண்பன் எடுத்த டிக்கட் மருதானையில்தான் சங்கமம் ஆகும். ஏன் என்றால் அங்கு தானே அவன் வீடு வாங்கி இருக்கிறான்! அந்தக் களிப்புடன் எனது கண்கள் தற்காலிகமாக மூடிக்கொண்டன. மருதானை ரயில்வே நிலையத்துக்கு ஒரு மைல் தூரம் இருக்கும் போது நான் கண் விழித்தேன். இனி இறங்கவேண்டியது நான்! நண்பனின் வீடு! இரவுச் சாப்பாடு! அதன் பின்பு வம்பளப்பு இப்படி கற்பனைக் கோட்டை கட்டிய நான் சூட்கேசைத் தூக்கிக் கொண்டு நாதனைத் தேடினேன்.

எதிர்ப்பக்கத்தில் இருந்தவர் கேட்டார்;

''என்ன தேடுகின்றீர்கள்''?

''என்னுடன் கூட வந்த நண்பரை''

''அந்தக் கறுத்தப் பொடியனா''? அவர் திருப்பிக்கேட்டார்.

ஓம் என்றேன் நான். ''அவர் ராகமத்தில் இறங்கிப் போனதை நான் பார்த்தேன்'' என்றார்.

அவரின் சாட்சியத்தில் முரண்பாடு இல்லை. இறக்கிய சூட்கேசை மீண்டும் மேலே வைத்தேன்!

கொழும்புக் கோட்டையில் சூட்கேசை இறக்கிக்கொண்டு வேகமாக நடந்தேன். அப்போது சூட்கேசின் கனம் லேசாகத் தெரிந்தது ஆனால் உடலின் பாரத்தை விட மனதின் பாரம் அதிகரித்திருந்தது. எத்தனையோ வருடங்கள் உருண்டு விட்டன. ஆனால் நண்பன் நாதன் மட்டும் எனது கண்களில் படவே இல்லை!

# சிவகுமாரனின் ஓவியங்கள்

அருந்ததி சபாநாதன்.
(நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

ஜேர்மனியில் வாழும் யாழ்ப் பாணத் தமிழரான திரு. சு. சிவ குமாரன் அவர்களின் சில ஓவியங் களையும், சிற்பங்களையும் பார்க் கும் வாய்ப்புக் கிடைத்தது.



இயற்கை தட்டிக் கொடுக்கும் உணர்வைக் கொண்டு கலையை படைத்தல் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கும் இக்கலைஞரின் படைப்புக்கள் காட்சியையோ, பொருளையோ இயற்கையாக உள் ளது போன்றே படைக்காமல் தன் னுணர்வை, அதிலிருந்து தான் பெற்ற அனுபவத்தை தன் படைப் புக்களில் கொண்டு வருகின்றார்.

இயற்கையின் ஒவ்வோர் வடிவ மும் ஒவ்வொருவருக்கும் தனித் தனி அனுபவங்களையே தருகின் றன. தான் பெறும் அனுபவத்தை ஓர் கலை வடிவூடாகக் கொடுக்க வல்லவனே கலைஞன்;

இவரது சிற்பங்களில் இடைவெ ளியின் கையாள்கை அற்புதமாக அமைந்திருக்கின்றது. இயற்கையி லுள்ள பொருட்கள் மட்டுமல்ல இவரது சிற்பங்களும் எண்ணங்க ளைப் பலவாறும் தூண்டுவன வாய் அமைகின்றன. குறியீட்டுத் தன்மையில் பொருளைக் கொண்டு வரல் இவர் பண்பாக அமைகின் றது. சிற்பங்களில் இடைவெளி பெறும் முதன்மை சுருள் வடிவங் களும் பெற்றுக் கொள்கின்றன. ஒவ்வோர் ஓவியனுக்கும் தனக் கென தனித்துவமான வர்ணங் கள் அமைந்திருப்பது போன்று இவரது சிற்பங்களில் காட்டப் பட்டிருக்கும் வளைவு சுளிவுகள் இவரது படைப்பைத் தனித்துவ மாக எடுத்துக் காட்டுகின்றது.

முற்று முழுதான சிதைவுகள், விகாரங்கள் என்பவற்றை உட்படுத் தாத ஆனால் தட்டைத் தன்மை

யற்ற போக்கு இவர் ஓவியங்களில் காணப்படுகின்றது. ஓவியத்தின் முன்னணியுடன் இணைந்து பின்னனிக் கோடுகள் வெளிப்பட்டாலும் வர்ணப்பயன்பாடு அவற்றைப் பிரித்துக் காட்டுகின்றது.

மேலும் கறுப்பு அல்லது கபில நிற வெளிக்கோட்டுக் (Outline) கையாள்கை இலங்கை ஓவியங்களுக்குரிய தனித்துவம் ஆகும். அந்த வகையில் சிகிரியா ஓவியங்களிலும் தொடர்ந்து வந்த சுவர் ஓவியங்களிலும் கடும் வர்ணத்தாலான வெளிக்கோடுகள் முதன்மை பெறுகின்றன. இப்பண்பு இலங்கையின் பழைமையான ஓவியங்களுக்குரிய தனிப்பண்பாய் அமைந்ததுடன் மட்டுமல்லாமல், நவீன ஓவியர்களும் வெளிக் கோட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தலை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இலங்கையின் நவீன ஓவியர் ஜோர்ஜ் கீற்றின் ஓவியங்கள் இதற்கு நல்ல உதாரணமாக விளங்குகின்றன. இவ்வாறான கோட்டின் கையாள்கை இவரது ஓவியங்களிலும் காணமுடிகின்றது. வளைந்த கோடுகளை விட முறிவுகளுடனான கோடுகளை இவர் மிகவும் நேர்த்தியாகக் கையாண்டிருக்கின்றார்.

ஓவியங்களின் விடயம் தமிழ் மரபு சார்ந்து நிற்பதாகவே அமைந்திருந்தாலும், எனக்குப் பார்க்கக் கிடைத்த ஓவியங்களின் விடயங்களில் அதிகம் நவீனத்தை அதாவது சமகாலத்தை தரிசிக்கமுடியவில்லை காவடியாட்டம், காதலர் போன்ற விடயங்கள் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டாதவை. விடுதலை என்ற தலைப்பில் வெண்புறாவின் குறியீட்டுடன் வரைந்த ஓவியமும் கூட வரைதிறனிலும் வர்ணப் பாவனையிலுமே சிறப்புப் பெறுகின்றது.

கலப்பு வர்ணங்களைவிட மஞ்சள், சிவப்பு, நீலம் போன்ற வர்ணங்கள் இவர் ஓவியங்களை ஆக்கிரமிக்கின்றன. பச்சை, செம்மஞ்சள் ஆங்காங்கே இடம் பெற்றாலும் பொதுவாக மஞ்சளும், கபிலமும் இவர் ஓவியங்களுக்குரிய நிறமாக அமைந்து விடுகின்றது.

பொதுவாக ஓவியங்களுக்குரிய பொதுப்பண்பைப் பற்றிக்குறிப்பிடுவதாயின் படைப்புக்கள், தமிழியல் பண்பை உருவங்கள் மூலமும் வர்ணங்கள் மூலமும் கொண்டு வருகின்றன. குறிப்பாக உருவங்களின் பக்கப்பார்வையும் நீண்ட கண் அமைப்பும் இந்திய, இலங்கை ஓவியப் பாணியை வெளிப்படுத்தினாலும், இந்திய ஓவியங்களின் கூர் மூக்கு விடுபட்டு நிற்பது இந்தியத்துவத்தை இவர் ஓவியங்களில் விலகதி விடுகின்றது.

அனேகமான ஓவியங்கள் கோடுகளால் நிறைக்கப்பட்டனவாக காணப்படுகின்றன. அத்துடன் இலங்கையின் ஏனைய ஓவியர்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது ரமணியும், அ. மாற்குவும் சில சில இடங்களில் ஞாபகப்படுத்தப்படுகிறார்கள். இருந்தாலும், ஓவியத்தின் தரம் இவரது எந்தவொரு ஓவியத்திலும் விடுபட்டுப் போகவில்லை என்றே கூற வேண்டும். மேலும் ஓவியங்கள் ஓர் தமிழரின் படைப்புக்கள் என்பதைப் பார்த்ததும் எடுத்துக் காட்டுவனவாக விளங்குகின்றன. தன் தனித்துவத்தையும் அடையாளத்தையும் தனது படைப்புகளில் கொண்டு வருதல் ஒவ்வொரு படைப்பாளிக்கும் உரிய கடமையாகும். இதனை சு. சிவகுமாரின் கலைப்படைப்புகளில் முழுமையாகக் காண முடிகின்றது.



மணிவிழாக் காணும் கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம் உதயத்தின் மதிப்பிற்குரியவர். ஈடுபாடுகளை வெளிப்படுத்துமுகமாக அவராலே எழுதப்பட்ட அவரது வாழ்க்கை அனுபவங்களை கீழே வெளியிடுகின்றோம்.

## இப்படியும் சில ரசிகர்கள்..

—மாஸ்டர் சிவலிங்கம்—

அண்மையில் இராணுவத்தினால் விசேட அடையாள அட்டை மட்டக்களப்பு பகுதியிலே வழங்கப்பட்டது. அந்த விசேட அடையாள அட்டையைப் பெறும் நோக்கத்துடன் கல்லடி சித்தி வினாயகர் வித்தியாலயத்துக்குச் சென்றேன். எனது பைசிக்கிளை ஓரிடத்தில் நிறுத்தினேன்.

சற்றுத் தொலைவில் நின்ற ஓர் இராணுவ வீரர் என்னையே கூர்ந்து அவதானித்துக் கொண்டிருந்தார். பிறகு என்னை நோக்கி விரைந்து வந்து எனது கையைப் பிடித்துக் கொண்டார். என்னை ஒருவித இனந்தெரியாத பயம் பற்றிக் கொண்டது. எனது உடல் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. என்னை அறியாமல் எனது உதடுகள் இறைநாமங்களை உச்சரித்துக் கொண்டிருந்தன.

''நீங்க 'ரீவி'யில சின்னப் புள்ளைகளுக்குக் கதை சொல்ற ஆள்தானே...? நான் 'ரீவி'யில உங்கள ரெண்டு மூணுதரம் பாத்திருக்கிறன். நல்ல சோக்காக் கதை சொல்லுவீங்கதானே...? எண்ட ஊர் வறக்காப்பொளை. எங்கட ஊட்டில எல்லாரும் உங்கட கதையை 'ரீவி'யில விரும்பிப் பாக்கிறவங்க...... உங்களக் கண்டது மிச்சம் சந்தோசம்......''

இப்படிக் கூறி மகிழ்ச்சியுடன் கைகுலுக்கினார் அந்த இராணுவவீரர். அப்போதுதான் எனக்கு நிம்மதியாக மூச்சி வெளிவந்தது.

★ ★ ★

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருகோணமலை நகரசபைச் செயலாளரின் அழைப்பை ஏற்று கதை நிகழ்ச்சி ஒன்றிலே கலந்து கொள்ளும் பொருட்டு திருமலை சென்றிருந்தேன். திருகோணமலை வாடி வீட்டிலே நான் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

நகரசபைச் செயலாளர் திரு. பெனடிக்ற் தார்சீயஸ் அவர்களின் தலைமையில் எமது கதை நிகழ்ச்சி திருமலை சென். ஜோசப் கல்லூரி மண்டபத்திலே இடம் பெற்றது. பெருந்தொகையான மாணவ மாணவிகள் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு எனது கதையை வெகுவாக ரசித்து மகிழ்ந்தனர்.

அன்று பிற்பகல் நான் தங்கியிருந்த வாடி வீட்டின் பக்கத்திலே நின்று பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தேன். வாடி வீட்டுக்குப் பக்கத்திலே உள்ள வங்கியின் தலைமைப் பாதுகாவலர் சக பாதுகாவலரிடம் என்னைச் சுட்டிக் காட்டி ஏதோ கூறிக் கொண்டிருப்பதைக் கண்டதும் எனக்குத் 'திக்' என்றது.

மாலை வேளையில் வங்கியின் முன்னால் நான் நின்றதைப்பார்த்து அவர்களுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டு விட்டது போலும்' என்று மனதில் எண்ணியபடி வாடி வீட்டுக்குள் செல்ல முயன்றேன்,

மின்னல் வேகத்தில் ஓடிவந்த காவலாளி எனது கையை இரும்புப் பிடியாகப் பிடித்து வங்கிக் கட்டிடத்துக்குக் கூட்டிச்சென்றார். பயத்திலே எனது நாக்கு வரண்டு விட்டது. என்னால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. அவருடைய பிடியிலிருந்து விடுபட எவ்வளவோ முயற்சி செய்தும் பலன் கிடைக்க வில்லை.

'ஐயா! பயப்படாதீங்க .. அவர் இந்த வங்கியின் பிரதம பாதுகாவலர். கொழும்பைச் சேர்ந்த சிங்களவர். உங்களை பல தடவைகள் ரூபவாஹினி சிறுவர் நிகழ்ச்சியிலே பார்த்திருக்கிறாராம். அவருக்குத் தமிழ் தெரியாவிட்டாலும் நீங்கள் நடிப்புடன் கதை சொல்வதைப் பார்த்து ரசிப்பாராம். உங்களை இங்கே நேரிலே கண்டதும் அவருக்கு பெரிய சந்தோசம். உங்களைப் பாராட்டுவதற்குத்தான் கூட்டி வரச் சொன்னார்'

இப்படி அந்தக் காவலாளி கூறியதும் அசட்டுச் சிரிப்பு சிரித்தபடி நிம்மதியாகச் சென்றேன். தலைமைக் காவல் அதிகாரியான அந்தச் சிங்கள அன்பர் ''ஹலோ!'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறியபடி ஓடிவந்து எனது கையைப் பிடித்துக் குலுக்கினார். தான் எனது ரசிகர் என்று ஆங்கிலத்திலே பல தடவைகள் கூறி மகிழ்ச்சி அடைந்தார். பெருமகிழ்ச்சியோடு நான் வாடிவீட்டுக் திரும்பினேன்.

# "புலவர்மணி கவிதாஞ்சலி"

— வெல்லவூர்க்கோபால் —

சிந்தை வளம் சுரப்ப செந்தூர் தமிழ்மணக்கும்
கந்தன் அருள் ஓச்சும் கலைக் கோட்டம் மாமண்டூர்
ஏரம்ப மூர்த்திசிறப் பேற்றும் உயர்குடியில்
பேராளன் பெரியதம்பிப் பிள்ளை பிறந்ததுவும்
தமிழைக் கடைந்துபுகழ் சங்கம் வளர்த்ததுவும்
அமுத மனைபுகுந்து அகப்பே றடைந்ததுவும்
ஆல்போல் விழுதுகளை ஆடிப் பரப்பியதில்
கோலோச்சி தலைமகனாய் குலம்சிறக்க வாழ்ந்ததுவும்
புகழேந்தி வரிசையிலே புலவர்மணி ஐயா
வைரமணி யாகியொரு வரலாறாய்ப் போனதுவும்
கடல் கடந்து நாடெல்லாம் கொடிகட்டி வாழ்ந்தமகன்
பிடிசாம்ப ராகித்தன் பெயர்நிறுத்திக் கொண்டதுவும்
நாளை உலகமிவன் நனவிடை தோய்வதற்கு
காலம் எழுதிவிட்ட கல்வெட்டாய் ஆனதுவாம்!

நிமிர்ந்த நடை, மெலிந்த உடல், நீள்உருவம், வெள்ளாடை
கனிந்த விழி, உயர்நெற்றி, கம்பீர மானகுரல்
எவரிடமும் கெஞ்சாமை, எதுவரினும் அஞ்சாமை
புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை இவராகும்.

வெண்பாவிற் புகழேந்தி மீண்டுமுயிர் பெற்றது போல்
வெண்பாவில் கீதைதந்து மேதினியில் புகழ்பெற்றாய்!
கற்றார் ஏற்றும் கவித் தொகையில் பாலையினை
வற்றாத தமிழூற்றாய் மணம் வீச விட்டிருந்தாய்!
மீட்சிப் பத்தினிலே விபுலானந்த மாமணியை
ஆட்சி விளங்க அழகாகச் சித்தரித்தாய்!
உள்ளதும் நல்லதுமாய் உரைத்த உணர்வலைகள்
உள்ளவரை சமூக உயிரோட்ட மாயிருக்கும்
புலவர்மணி பாடல்களாய் புனைந்த தமிழ்மாலை
நிலைத்து மணம்கமழும் நின்புகழும் உடன்கமழும்
தனிப் பாடல்களில் சமூகத் தளங்களெலாம்
'ரண சிகிச்சை'' செய்த எங்கள் தலைமகனே நீவாழ்க!

தேசியத்தை நோக்கி சிறகடித்துப் பறந்துவிட்டு
தேசியமே பாசிசமாய் சிறகொடித்த நிலைமையிலே
வெந்து கனன்று விழிநீர் சொரிகின்ற
இந்த நிலையிலுனை எண்ணிநான் பார்க்கின்றேன்!

சிறுபான்மை யினம்தம்முள் சிறுமையினைத் தேடாது
பெரும்பான்மை யுடனுரிமை பெறும்வழியைக் கண்டிருப்பின்
மரம்செடி கொடிப்பிரிவு வந்திருக்க மாட்டாது.
என்ற உண்மைதனை என்றோ உணர்ந்தவன்போல்
தமிழ்பேசும் ஈரினமும் தாய்வழியில் ஒன்றென்றே
இமை கண்ணை விடுத்தாலும் இதயமிரண் டானாலும்
அழிவு தமிழ் மொழிக்கே ஆகவே நம் சோதரே!
இழிவு தனைவிடுத்து ஈரினமும் ஓரினமாய்
''இதயத்தி னீரிதழாய்'' என்றும் நிலைப்பதுதான்
அதியுயர்வு என்று அன்று அறுதியிட்டு சொன்னவன் நீ!
வைரமணி நீயும் வாழ்ந்திருந்த காலமதில்
சரிபுதீன் தமிழ் மணியை தழுவி நின்ற காட்சியெலாம்
நினைவில் வருகிறது நீண்டுவிடா மீண்டும் நாம்
அணைத்திருக்கும் காலமும் அதனுள் தெரிகிறது
கிழக்கே ஒருமணியும் வடக்கே ஒருமணியுமென

ஒலித்துவந்த தமிழோசை ஒன்றாய் இணைகிறது.
சமூகக் கொடுமைகளை சாகடிக்க வேண்டுமென்று
திடமாய் உழைத்திட்ட சீர்திருத்தக் காரன்நீ!
ஆலயங்கள் பலவற்றின் அழிவுக்கு வழியமைத்த
குலவழக்கு, குடிவழக்கு, சாதி, சமூகமைப்பு
என்பவற்றை நீக்கி எத்தனையோ ஆலயங்கள்
மீண்டும் செழுமையுற வேண்டி உழைத்தவன் நீ!

தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை; ஐயாநீ!
தமிழென்றும் சமயமென்றும் சமூகமென்றும் நாளெல்லாம்
ஓடி உழைத்தாலும் உடலமது தேய்ந்தாலும்
வாடி யிருந்ததில்லை மனம்சோர்ந்து போனதில்லை
தேடியுனை வந்தோரை தீண்ட மறுத்ததில்லை
கோடிபணம் சேர்த்துந்தன் குடும்பத்தைப் பார்த்ததில்லை
கவியரசே! உந்தன் கதைபடிப்போர் நாளை
புவியரசன் இவனென்றே போற்றுவது நிச்சயமே!

இக் கவிதை 13-03-1994ல் இடம் பெற்ற புலவர்மணி நூல் வெளியீட்டுவிழாவில் பாடப்பட்டதில் ஒரு பகுதியாகும்.

புலவர் மணியின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டு முகமாக இவ்வஞ்சலிக் கவிதை வெளியிடப்படுகின்றது; இவரது சேவையை நினைவு கூரும் முகமாக இலங்கை அரசு 22-05-94ல் தபால் தலை ஒன்றினை வெளியிடவுள்ளது.

சிறுகதை:

# இஸ்திரிக்கை

மலையாள மூலம்: பி. ஹரிகுமார்


தமிழில் : வி. ஆனந்தன்

எங்களுடைய கொலனியில் இருப்பவர்களுக்கு புதன்கிழமையை அறிவதற்கு கலண்டரே தேவையில்லை. புதன் கிழமை சூரியன் உதிக்குமென்றால் பிச்சையப்பனின் இஸ்த்திரிக்கை வண்டிஎங்களுடைய கொலனிக்கு வந்து விட்டது என்று அர்த்தம்.

''அம்மா இஸ்த்திரிக்கை...''

இது ஒரு அலாரம்; இன்று புதன்கிழமை ஆறரை மணி.

ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று துணி சேகரிப்பது பிச்சையப்பனின் வழக்கம் அல்ல. குறுக்கு மறுக்காக சென்று கொண்டிருக்கும் வீதிகளில் சில பிரத்தியேக 'பொயின்று'களில் பிச்சையப்பனின் வண்டி நிற்கும். அடுத்தடுத்த வீடுகளில் இருந்து துணிகள் வந்து சேரும். பிச்சையப்பனிடம் கசங்கிச் சுருங்கி வரும்



சாரிகளும்,சேட்டுகளும் கம்புபோல நீண்டு நிமிர்ந்து அவர்கள் வீடுக ளுக்குத் திரும்பும். பிச்சையப்பனு டைய தரிசனம் வீட்டுப் பெண்களு க்கு ஒரு வரப்பிரசாதம். காரணம் இரண்டு. இஸ்த்திரிக்கை வண்டி யைச் சுற்றி நின்று காலைநேரச் சல்லாபம்செய்வதற்குச் சந்தர்ப்பம் கிட்டும். இரண்டாவது பிச்சையப் பனின் பேச்சு. தண்ணீர் தெளித்த துணிகள் மீது அழுத்தும் இஸ்த் திரிக்கை பெட்டியின் சூடு போன்ற சூடான செய்திகள் அடங்கிய பேச்சு. நகரத்தில் இருக்கும் எல்லா ஹவுஸிங் கொலனிகளும் பிச்சையப் பனின் அதிகார எல்லைக்குட்பட் டவை. அங்கெல்லாம் நடக்கும் வழக்குகள், அடிதடிகள், பிரபல மானவர்கள் பற்றிய கிசுகிசுக்கள் என்று சூடான ரசவடை போன்ற செய்திகளைப் பந்தி வைப்பான். அவைகள் எல்லாவற்றிலும் சுவை யானது அவனின் சினிமாச் செய்தி கள். பிச்சையப்பன் ஒரு தீவிர சினி மாரசிகன். ஒரு சினிமாப்படத்தை மூன்று தரமாவது பார்க்கா விட் டால் அந்தப்படத்தைப்பற்றி மதிப் பீடு செய்யமுடியாது என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண் டவன். தமிழ் சினிமாவில் கூடுதல் அபிமானம் கொண்டவன். ஒரு மலையாள நடிகன் கதாநாயகனாக நடித்த தமிழ்ப் படத்தைப் பார்த்த பிச்சையப்பன்,

"சரி இல்லை, சரி இல்லை; உங்க நடிகனுக்கு டான்சும், பைற் றும் சரிவராது" என்று அதிருப்தி யுடன் கூறினான்.

சில நாட்களில் 'ஓவ்மூட்' டில் பிச்சையப்பன் வருவான். அன்று கொலனிப் பெண்களுக்கு சினிமாக் கதை சொல்லி ரசிக்க வைக்க தயா ராக இருக்க மாட்டான்.

துணிகளுடைய மடிப்புகளை நிமிர்த்தி துணிகளின் மீது இஸ்த் திரிக்கைப் பெட்டியை அழுத்தித் தேய்த்துக் கொண்டவாறு மௌ னம் அனுஸ்டித்துக் கொண்டிருப் பான். அந்த மௌன அனுஸ்டிப் பின் காரணத்தை கொலனிப் பெண் கள் அறியமாட்டார்கள். காரணம் கேட்டால் நேற்று நான் ஒரு கனவு கண்டேன் என்று அவன் சொல்லும் போது அவனது முகம் இருண்டு கண்களில் நீர் நிரம்பிவிடும். பிச்சை யப்பனின் கனவுகளில் அவனுடைய இறந்து போன மனைவி சுந்தரி தோன்றுவாள். அவளுடைய அழ கைப்பற்றியும், பனங்குலை போன்ற கொண்டையைப்பற்றியும் கொல னிப் பெண்களுக்கு வர்ணித்துச் சொல்லுவான்.

**ஆகப் பெரிய மணி**

மாஸ்கோவிலுள்ள கிரம்ளி னில் தான் உலகிலேயே ஆகப் பெரிய மணி இருக்கி றது: 1733ல் உருவாக்கப் பட்ட இந்த மணியின் எடை 210 தொன் ஆகும். ஆனால் இந்த மணியின் துரதிர்ஷ்டம் முதலாவது தடவை ஒலிக்கும் போதே 11 தொன் எடை யுள்ள ஒருபகுதி உடைந்து விழுந்து விட்டது!

''அவளைப்பார்த்தா உங்கமாதிரி இல்ல; முன்னால நம்மட சரோஜாதேவி இருந்தா அல்லவா அந்தமாதிரி''

பிச்சையப்பனின் மனைவியைப் பற்றிய கதையை கொலனிப்பெண்கள் பல தடவைகள் கேட்டிருக்கிறார்கள். அவனும், அவனுடைய மனைவி சுந்தரியும் புதுக்கோட்டைக்குப்பக்கத்தில் உள்ள மலையில் கல் உடைக்கும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். மலையுச்சியில் பாறைக்கு வெடி வைக்கும் போது, அதற்குரிய முன்னறிவிப்புக் கேட்டு ஓடி ஒழுவதற்கு முன்பு, வெடித்துச் சிதறிய ஒரு பெரிய பாறாங்கல் சுந்தரி மீது விழுந்து அவளுடைய சரீரத்தை சிதைத்துச் சின்னாபின்னமாக்கியது. ஒன்றரை வயதுள்ள மகன் பழனிச்சாமி தாயுடைய சிதைந்த உடலைக் கண்டு கை கொட்டிச் சிரித்தான். அதன் பின் பழனிச்சாமி அவனுடைய உயிராகவும், இலட்சியமாகவும் மாறி விட்டான். கஷ்டப்பட்டு வேலை செய்து பழனிச்சாமியை பாடசாலைக்கு அனுப்பினான். பழனிச்சாமி பாடசாலையில் விளையாட்டுகளில் முன்னணியில் நின்றான். விளையாட்டுப் போட்டிகளில் பரிசுகள் பெற்றான். பழனிச்சாமியின் சரீரம் ஒருகிரேக்கச் சிலையைப் போல உருப்பெறுவதற்கு பிச்சையப்பன் 'பிச்சை'யப்பனாக மாறி விட்டான். இன்று பழனிச்சாமி தமிழ் நாட்டில் ஒரு பொலிஸ் கொன்ஸ்டபிள். ஒரு கணவனும், தகப்பனுமாக மேட்டுப்பாளையத்தில் குடி இருக்கிறான்.

கதை இவ்விடத்தை அடையும் போது ரசிகர்களின் உணர்வு விழித்துக் கொள்ளும். உத்தியோகத்தனும் குடும்பஸ்த்தனுமான மகனோடு இருக்காமல் பிச்சையப்பன் ஏன் இஸ்த்திரிக்கை வண்டியோடு இந்த மலையாளக்கரையில் அலைந்து திரிய வேண்டும்; இதற்குப் பதில் மௌனம். நீண்ட மௌனம். முடிவில் ஒரு பெருமூச்சு.

''அதெல்லாம் என்ட தலை விதி'' கொலனிப் பெண்களின் மனம் இதனால் சமாதானம் அடையாது. பழனிச்சாமி பிச்சையப்பனுக்கு ஏசி விட்டானோ அல்லது அவனது மனைவி துரத்தி விட்டாளோ?

பிச்சையப்பன் அலுப்படைந்தவன் போல காணப்படுவான் விசயம் மாறும்.

''அம்மா அதோ அந்தச் சாரி கொஞ்சம் கிழிஞ்சிருச்சி'' அன்று பிச்சையப்பன்பழயமூட்டிற்கு திரும்பமாட்டான். முகம் வாடிவிடும். அவனுடைய இதயத்தின் குமுறல் அவனது கறுத்தமுகத்தில் பிரதிபலிக்கும். சில வேளைகளில்வேலையை இடையில் நிறுத்தி விட்டு வண்டியைத் தள்ளிக் கொண்டு போய்விடுவான்.

ஒரு தடவை கோயம்புத்தூரில் அரசியற் கலவரம் ஒன்று நடந்தது. அதில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் அனேகம் பொலிஸ்காரர்கள் இறந்தும் விட்டார்கள். ஒரு புதன்கிழமை பிச்சையப்பன் கவலையுடனும், சோர்வுடனும்

கொலனிக்கு வந்தான். கலவரம் கோயம் புத்தூரில் நடந்தாலும் மேட்டுப் பாளையத்திலிருந்தும் பொலிஸ் போயிருக்கும். மலையாளப் பத்திரிகைகளில் காயப்பட்ட, மரணமடைந்த பொலிஸ்க்காரர்களின் பெயர்கள் ஒன்றும் வெளிவரவில்லை. தமிழ்ப் பத்திரிகைகள் இங்கு கிடைப்பதில்லை.

''நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள். பழனிச்சாமிக்கு என்ன நடந்தாலும் உங்களுக்கென்ன, அவன்தான் உங்களைத் திரும்பிக் கூடப்பார்ப்பதில்லையே'' என்று ஒரு பெண் பிச்சையப்பனிடம் கேட்டாள்.

ஒரு நிமிசம் பிச்சையப்பன் மௌனமாக இருந்தான். பின் நடந்தது யாரும் எதிர்பார்க்காதது. இஸ்திரிக்க வண்டிச்சட்டத்தில் முகம் புதைத்துஅழுதான். ஏன்அழுகிறான் என்று அறியாவிட்டாலும், ஒரு சக ஜீவியின் கண்ணீரைக் கண்ட கொலனிப் பெண்கள் கண்களிலும் நீர்நிறைந்தது.

ஒரு புதன்கிழமை பிச்சையப்பனின் இஸ்திரிக்க வண்டியின் தேய்ந்த டயர் ரோட்டில் உருண்டு வரும் போதே கொலனியைக் குதூகலத்தில் ஆழ்த்தும் செய்தியோடு வந்தது:

பிச்சையப்பன் மாப்பிள்ளை ஆகப் போகிறார். ஐம்பது வயதைத் தாண்டிய, உருக்கி வார்த்த தாரின் நிறமும், நரைத்த மீசையுமுள்ள பிச்சையப்பன் மாப்பிள்ளைக் கோலம் பூணப் போகிறார். அதைச் சொல்லும் போது பிச்சையப்பனின் முகத்தில் படர்ந்த நாணம் கொலனியில் வசிப்பவர்களுக்கு சிரிப்பூட்டும் செய்தியாகி விட்டது.

மணமகளின் வீடு நகரத்தின் ஒதுக்குப் புறத்தில் தரித்திரம் தங்கியுள்ள ஒரு ஓலைக்குடிசை. மணமகள் இரண்டு கலியாணம் முடித்து விட்ட முப்பத்தைந்து வயசுக்காரி.

''அவ்வளவு அழகெண்டில்ல. ஆனால் நல்ல சுபாவம்''

பிச்சையப்பன் திருப்திப் பட்டுக் கொண்டான். இந்த வயசில் நான் ஒரு அழகுள்ள பொண்டாட்டி வேணுமெண்டு ஆசைப் படக் கூடா. ஒரு துணை. அதுக்கு அவள் போதும். மூன்றாம் கலியாணம் கட்டிக் கொள்ளப் போகும் வேலம்மையை அவளுடைய முதல் இரண்டு கணவன்மாரும் விட்டுப் போன காரணம் என்ன என்று யாரோ ஒருத்தி கேட்ட போது பிச்சையப்பன் ஒரு தத்துவஞானியாக மாறி கடவுள் சேர்த்து வைப்பதை மனிதன் பிரித்து வைக்கிறான். வேலம்மை என்ற ஜுனியர் எலிசபெத் டெய்லருக்கு என்னோடு வாழ வேண்டும் என்பது விதி என்றான்.

''ஞாயிற்றுக்கிழமை மோதிரம் மாத்திற: வாற மாசம் இருபத்தைந்தாம் திகதி கலியாணம். மோதிரம் மாற்றும் போது கொண்டாட்டம் ஏதும் இல்லை. பிச்சையப்பன் ஒரு மோதிரத்தை தன் எதிர்கால மனைவியின் விரலில் அணிவிப்பான்; அதற்குப் பதிலாள்

அவள் அவருக்கு மோதிரம் அணிவிக்க மாட்டாள் என்பது ஏற்பாடு.

பிச்சையப்பனின் விரல்கள் இடது கையில் கிடந்த தங்க மோதிரத்தை உருவி எடுத்தன. அவனுடைய முகத்தில் கவலை படர்ந்ததை கொலனிப் பெண்கள் கண்டனர்.

**இப்படியும் வாழ்கிறார்கள்**

மிருகங்கள் கணவன் மனைவி என்ற கட்டுப்பாடுடனா வாழ்கின்றன. மனிதனும் அப்படி வாழ்ந்தாலென்ன? இப்படியொரு அசட்டு எண்ணம் வருகிறதா? இது ஒன்றும் ஆச்சரியமில்லை 'ஆல் செயின்டஸ் ஆன்டிகுவா' என்னும் கரீபியின் தீவு மக்கள் இப்படித்தான் வாழ்கிறார்கள். ஒரு ஆணுக்கு ஆறு ஏழு துணைவியர்கள்! அந்த துணைவியர்களுக்கு வேறுகாதலர்கள். இப்படி வாழ்கிறார்கள்.

அவனுடைய ஆத்ம சமர்ப்பணத்தின் அடையாளம் அந்த அரைப் பவுண் மோதிரம். மணப் பெண்ணாக நின்ற சுந்தரியின் அழகிய விரலில் அவன் அணிவித்த காதல் சின்னம்; சிதைந்து போன ஒரு மாமிசத் துண்டிலிருந்து அதை அவன் உருவி எடுத்த போது அவன் உள்ளம் எரிந்தது. அந்தத் தீ உள்ளத்தில் இன்றும் எரிந்து கொண்டுதான் இருக்கிறது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை இந்த மோதிரம் மூன்றாம் கலியாணம் கட்டப் போகும் வேலம்மையின் விரலில் ஏறும் போது, சுந்தரியின் ஆத்மா அழுமா?

அடுத்த தடவை பிச்சையப்பன் வந்த போது கொலனிப் பெண்களின் கவனம் பிச்சையப்பனின் மோதிரத்தைப் பற்றித்தான் இருந்தது. கையில் மோதிரம் இல்லை. அவனின் முகத்தில் மகிழ்ச்சி, ஒரே உற்சாகம். கஞ்சி முறுக்கிய துணிகளை அழுத்தித் தேய்த்துக் கொண்டே தனது எதிர் காலத் திட்டங்களைக் கூறினான். கலியாணம் முடிந்ததும் வேலம்மை இப்போதுவசிக்கும் ஓலைக் குடிசையை வாடகைக்குவிடுவது, தான் பார்த்து வைத்திருக்கும் சின்னதானாலும் அழகான ஓட்டு வீட்டுக்கு குடி போவது வேலம்மைக்கு முந்திய கணவர்மார் மூலம் கிடைத்த இரண்டு பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்ப்பது.

"இனி நான்தானே அவர்களுடைய அப்பா" பிச்சையப்பனை சந்தோசப்படுத்திய இன்னொரு காரியமும் உண்டு; மோதிரம் மாத்துவதற்கு முதல் நாள் சுந்தரி பிச்சையப்பனின் கனவில் வந்து வேலம்மையைக் கட்டுவதற்கு அனுமதி அளித்தது.

'அவள் மனசுள்ளவள்; பெரிய மனசுள்ளவள்' கலியாண அழைப்பை எல்லோருக்கும் அறிவித்து விட்டுத்தான் அன்று பிச்சையப்பன் கொலனியை விட்டுப்

போனான்: வரவேண்டும் என்று யாரையும் நிர்ப்பந்திக்கவில்லை. காரணம் பெரிய சடங்கு சம்பிர தாயம் ஒன்றுமில்லை.

அடுத்த இரண்டு புதன்கிழமை களும் எங்கள் ஹவுஸிங் கொலனி ஓய்வாகஇருந்தது.பிச்சையப்பனின் இஸ்த்திரிக்க வண்டியும் அதைச் சுற்றி நிற்கும் பெண்கள் கூட்டமும் இல்லாத காலைகளாகக் கழிந்தது. பிச்சையப்பனின் கலியாணம் பற் றிய கதைகள் வீடுகளில் மாலை நேரப் பொழுதை விழுங்கிக் கொண்டிருந்தது. அவனுடைய முதல் இரவு பற்றியும் சில வீடுக ளில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

மாப்பிள்ளையான பிச்சையப் பன் கொலனிக்கு வந்த முதல் வரவு. அன்று இஸ்த்திரிக்கை செய் வதற்கு துணிகள் ஏதும் இல்லாத வீட்டுப் பெண்களும் பிச்சையப்ப னின் இஸ்த்திரிக்கை வண்டியைச் சுற்றிக் கூடி விட்டார்கள். அவர் களின் முகங்களில் எல்லாம் சந்தேச ச.ம், சிரிப்பு, கலியாண விசயங்க ளை அறிந்து கொள்ள வேண்டு மென்ற ஆவல்.

ஆனால் அவர்களுடைய ஆசை நிராசை ஆகிவிட்டது. கஞ்சியில் தோய்த்த முரட்டுத் துணி போல பிச்சையப்பனின் முக சுருங்கி இருந்தது.

''எல்லாம் போயிற்று. அந்த மலையாளப் பெண் என்னை ஏமாற்றி விட்டாள்'' கலியாணத் திற்கு முதல் நாள் வேலம்மையும் பிள்ளைகளும் பிச்சையப்பன் போட்ட மோதிரத்துடன் தலை மறைவாகி விட்டனர். அவர்களைக் குறித்து எந்த விபரமும் தெரியாது.

மைத்துளிகள் படர்ந்துள்ள பிளொட்டிங் பேப்பர் போல பிச் சையப்பனின் முகத்தில் துயரத்தின் துளிகள் படர்ந்திருந்தன. சுந்தரி அவனுக்காக பூமியில் விட்டுச் சென்ற இரண்டு நினைவுச் சின் னங்கள் ஒன்று பழனிச்சாமி. அது அவனிடமிருந்து ஏற்கனவே பறித் தெடுக்கப்பட்டு விட்டது. இரண்டு கலியாண மோதிரம் இன்று அது வும் அவனை விட்டுப் போய் விட்டது.

தளர்ந்து கிடக்கும் உலோகத் துண்டுகள் உண்டாக்கிய சத்தத் துடன் பிச்சையப்பனின் இஸ்த்தி ரிக்க வண்டி போகும் போது சிரிப்பதற்குக் கூடிய பெண்களுக் கிடையில் மௌனம் முளை கொண்டது. கண்ணுக்குத் தெரி யாத மூடுபனி சூழ்ந்து துயரத் தின் நூல் இழை எல்லோருடைய மனச்சாட்சியையும் ஊடறுத்து நின்றது.

அட்டையை அலங்கரிக்க அழகான கலர் படங் களை அனுப்பிவையுங்கள். வித்தியாசமான கோணங்க ளில் இளையோர் முதியோரின் படங்கள் இயற்கைக் காட்சிகள் விரும்பத்தக்கது. சன்மானம் வழங்கப்படும்.

ஆ-ர்.

தமிழ் நாடக விழா — 1994
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
கொழும்பு ஜோண்டி சில்வா மண்டபம்
பெப்ரவரி 12—16

# கொழும்பு நாடகமேடை மீண்டும் சலசலப்பை ஏற்படுத்துகிறது

**கே. எஸ்; சிவகுமாரன்**

ஐந்து நாடகங்கள் மேடைக்கு வந்தன: பயணம். ஆராரோ ஆரிவரோ, முகங்கள், தோட்டத்து ராஜாக்கள், பூகம்பம்; நாடகவிழா நடைபெற்று முடிந்து ஒரு வாரத்திற்குப் பின்னர், திணைக்களம் ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது. விழா முடிவுகளும் இம்மலரில் அறிவிக்கப்பட்டுள்ளன. முடிவுகளைச் செய்த நடுவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படவில்லை. இவர்கள் யாராயிருந்தாலும் இவர்களுக்குரிய மரியாதையையும், இவர்களின் முடிவுகளைக் கண்டனம் செய்யாமலும் தன்னிச்சையாக எனது மதிப்பீடுகளைத் தெரிவிக்கின்றேன்.

'நாடகம்' என்றால் என்ன என்று நான் விளங்கிக் கொண்டது ஒரு புறமிருக்க பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்ன கூறுகிறாரோ, அது முக்கியத்துவம் கொண்டதாகத்தான் இருக்கும்;

'...பார்ப்போரின் எதிர்பார்ப்பும் ஆற்றுவோரின் (ஆற்றுகைத்) திறனும் சங்கமிக்கும் பொழுது தான் நாடகம் பூரணத்துவத்தை எய்துகின்றது... முன்னர் நடந்ததை அல்லது நடந்திருக்கக் கூடியது என்பதை அல்லது நடக்கக் கூடியது என்பதை 'போலச் செய்தலே' நாடகத்தின் (கலையின்) அடிப்படை என்பர்... நடிகர் மூலமே நாடகம் வெளிப்படுகின்றது. நோக்கத் தெளிவும் செயற் பாட்டுத்திறனும் இணைகின்ற பொழுது நல்ல நாடகம் பிறக்கும்''

★

இந்த நாடகங்களில் என்னை மிகவும் கவர்ந்த நாடகம் 'தோட்டத்து ராஜாக்கள்' காரணம் மற்றைய மூன்று நாடகங்களை விட 'பயணம்' போல இது 'ஒரிஜினல் நாடகம். தழுவல் அல்ல. தவிரவும் உடனிகழ்கால வாழ்க்கைப் போக்கையும் அரசியல் நடைமுறையையும் விமர்சன ரீதியாகப் பார்க்

கிறது; நல்ல நகைச்சுவை; நல்ல வசனங்கள், சிறிய வசனங்கள்; நல்ல நடிப்பு.

கே. கோவிந்தராஜா எழுதிய இந்த நாடகத்தை, மிகத் திறமையாக அனுபவம் வாய்ந்த ஜே. பி ரொபர்ட் நெறிப்படுத்தியிருக்கிறார். காட்சி அமைப்பும், ஒப்பனையும் பாராட்டத்தக்கவை. இந்த நாடகத்தில் மற்றுமொரு தனிச் சிறப்பான அம்சம் மந்திரம் ஸ்ரீ முருகனின் இயல்பான நடிப்பு, குரல் வளம், பேசும் முறை, இயல்பான அங்க அசைவுகள், திட்டமிடப் படாமல் தற்செயலாகவே பாத்திரம் இயங்குவது போன்ற பிரமையை எழுப்பும் பாணி ஆகியன யாவும் பாராட்டத்தக்கவை.

★

அடுத்து எனக்குப் பிடித்த நாடகம் ''ஆராரோ ஆரிவரே'' சிங்கள நாடகம் ஒன்றின் தமிழ் வடிவம் இது என்று கூறப்படுகிறது. எனவே இது ஒரு தழுவலாக்கம்; மதுரை கிரிய விஜயரத்ன, அந்தனிஜீவா ஆகியோர் இந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். ஒரு ரஷ்ய நாடகம், எட்வர்ட் ஒல்பி என்ற அமெரிக்க 'அபத்த' (அப்ஸொர்ட்) நாடகாசிரியர் எழுதிய ''ஹய் இஸ் எ ஃப்கரயிட் ஒஃப்விர்ஜினியா வூல்ஃப்'' ஆகிய நாடகங்களின் செல்வாக்கை இந்த நாடகத்தில் அவதானிக்கலாம். இந்த நாடகத்தில் சிறப்பான அம்சங்கள் அந்தனிஜீவாவின் சொட்டன நெறியாளகை, ஹெலன் குமாரியின் வித்தியாசமான வரவேற்கத்தக்க நடிப்பு, கே. கதிர்காமத்தம்பியின் காட்சியமைப்பு. எஸ் கருணாரத்னவின் ஒளியமைப்பு, எம். ஐ. எம்லாவின் ஒப்பனை, வி. ஐ. ஜம்புநாதனின் இசையமைப்பு எனலாம்.



ஆராரோ ஆரிவரோ நாடகத்தில் நடிகை ஹெலன்குமாரியும் இராஜசேகரனும்

இந்த நாடகத்தில் நான்கு பாத்திரங்கள்: இருவர் முதியவர்கள். இருவர் இளையவர்கள், முதுமை, தனிமை பழங்கால நாட்டம்,குழந்தைப்பேறுக்கான ஆர்வக் கனிவு, பயங்கொள்ளித்தனம், தற்கொலையுணர்வு, மேலீடான கணவன் மனைவிஉறவு போன்ற அம்சங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன: உணர்ச்சித் தலை தடுமாற்றம், மற்றெருவரின் ஆளுமையிற்புகுந்து கற்பனையாக மற்றொருவரின் அனுபவத்தை அனுபவித்தல் போன்ற உணர்வுகள் ஹெலன் குமாரியின் சமநிலையான நடிப்பு மூலம் வெளிப்பட்டன; அவருடைய கணவரான ராஜசேகரனின் நடிப்பு அளவாக இருந்தாலும் கற்பனைச் செறிவான வெளிப்பாட்டுத்திறனை அவர் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஸ்ரீதர் பிச்சையப்பாவும் அவர் மனைவி நிலாமதியும் மட்டுப் படுத்தாமல் மிகைப்பட நடித்தமை இந்த நடாகத்தில் பொருந்தாதவொன்று.

*

மூன்றாவதாக, என்னைக் கவர்ந்தநாடகம்' பயணம்'' இதற்கு முக்கிய காரணம்,தமிழ் மேடையில் கத்தோலிக்க சூழலில் ஒரு குடும்பத்தின் கதை முதற் தடவையாக நிகழ்த்தப்பட்டமைதான். சமய, தார்மீகநெறிமுறைகளை உணர்த்துவித்தும் இந்த நாடகம், தலைதடுமாறிய இந்தக் காலகட்டத்தில் வரவேற்கத் தக்க ஒன்றாகும். அதே சமயம், உடனிகழ்கால நாடகம் ஒன்றிற்கான மெருகைக் காண முடியவில்லை: பாத்திரங்கள் ஒன்றில் நல்லவர்களாக அல்லது தீயவர்களாகத் தீட்டப்படுவதனால் நம்புந் தன்மையற்றுப் போகிறது. இது காரணமாக நாடகத்திற்குத் தேவையான 'முரண்படுநிலை, இயல்பாய் அமையாமற் போய் விடுகிறது.

நல்ல நடிப்பும், நறுக்குத் தெறித்த வசனங்கள், பொருத்தமான காட்சியமைப்பு போன்றவை அமைந்தாலும் பார்வையாளர் நாடகத்தில் 'லயிக்க' முடியாது போயிற்று. மிகவும் மோசமான முறையில் நடந்து கொள்ளும் நரிப் புத்தியுடைய மாமனாராக ஜே. சோமசுந்தரமும், வேலையாளாக நடித்த செ. யூ. தாஹிராவும் சிறப்பாக நடித்தனர். அம்புறோஸ் பீற்றர் நடிப்பும் பாத்திரத் தன்மைக் கேற்ற விதத்தில் அமைந்தது. கதை வசனம் எழுதி நெறியாள்கை செய்த அருள் மா. இராசேந்திரன் பாராட்டத்தக்கவர்.

லூஜி பிரெண்டெல்லோவின் ''ஆசிரியரைத்தேடி ஆறு பாத்திரங்கள்'' (சிக்ஸ் கறெக்டர்ஸ் இன் சேர்ச் ஒப் என் ஓதர்) என்ற நாடகத்தைத் தழுவியதாக மலையாள மொழியிலிருந்து தமிழாக்கப்பட்ட 'முகங்கள்' நாடகம் அமைந்திருந்தது. இரா. சுப்பிரமணியதாஸ் கதை, வசனம் நெறியாள்கை கே. மோகன்குமார், காட்சியமைப்பு வோல்டர் ராஜரத்தினம், ஒளியமைப்பு, எம். வி. எட்வர்ட். இவையாகவும் கச்சிதம்.

வேஷதாரித் தனங்களையும், முகங்களை மூடும் முகமூடிகள் கிழிக்கப்படுவதையும் காட்டி நிற்கும் இந்நாடகம் நல்ல நடிப்பை வெளிக் கொணர்ந்தது. குறிப்பாக

கமலஸ்ரீ, மோகன்குமார்,வி. ராஜம் நெறியாள்கை செய்த கே. மோகன் குமார், எம். எம். ஏ. லத்தீப் ஆகியோர் வெளிப்பாடு இயல்பாய் அமைந்தது.

துணிவு, ஒளிவு மறைவில்லாமை வேண்டுமென்றே எரிச்சலூட்டுகின்ற தன்மை, யதார்த்தம் அதிர்ச்சி போன்ற பண்புகளை இந்நாடகத்திற் காணக் கூடியதாய் இருந்தது. ஆயினும் நாடக இறுதிக் கட்டங்கள் கலையை மீறி சமுகப் பிரச்சனைகளை அரசியல் சுலோகப் பிரகடனங்களுக்கு இடங்கொடுத்து விட்டன. சொல்லாமற் சொல்ல வேண்டியதை பகிரங்கமாக கலாரீதியற்ற வகையில் சொல்லப்படும் பொழுது அங்கு பிரச்சாரம் தலை தூக்கி விடுகிறது. இதுவே எனக்குப் பிடிக்காமற் போய் விட்டது.

★

இறுதியாக 'பூகம்பம்' மேடையேறியது. இந்த நாடகத்தின் துண்டுப் பிரசுரமொன்றிலே பிரபல சிங்கள நாவலாசிரியர் மார்ட்டின் விக்கிரமசிங்கவின் ''பத்தேகம'' நாவலைத் தழுவி இந்நாடகம் எழுதப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 'பத்தேகம' என்ற பெயரில் விக்கிரமசிங்க சிறுகதை ஒன்றை எழுதியிருக்கிறாரோ நானறியேன். ஆனால் அதே பெயரில் ஆங்கில நாவலொன்று சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதை நானறிவேன். லெனாட் வூல்ப் என்ற முன்னாள் பிரிட்டிஷ் சிவில் சேர்வண்ட் இலங்கையில் பணிபுரிந்த பொழுது' த விலேஜ்இன் த ஜங்கிள் என்ற ஆங்கில நாவலை எழுதியிருந்தார். பின்னர் இந்த நாவல் 'பெத்தேகம' என்ற பெயரில் சிங்களத் திரைப்படமாக லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் நெறியாள்கையில் வெளிவந்தது. இது தகவல்.

எம்.உதயகுமார் மேடைக்கதை வசனம் அமைத்திருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக பார்வையாளர்களின் பகுத்தறியும் பாங்கைப் புறக்கணித்து அந்தநாள் தமிழ் திரைப் படங்களைப்போல் வசனங்களைத் திரும்பத்திரும்ப எழுதியிருக்கிறார். பிரத்தியட்சமாகக் கண்ட காட்சிகளை மீண்டும் வசனங்களில் எடுத்துரைப்பது ''நாடகத்தன்மை''யைக் கெடுக்குமல்லவா.

ஒலியமைப்பு (எ. சி. எம். ஹுசைன் பாறூக்) ஒப்பனை (முத்தையா) காட்சியமைப்பு (H. சொய்ஸா மாஸ்டர்), தயாரிப்பு (கே.செல்வராஜன்) எல்லாம் பிரமாதம் ஆனால் ''நாடக''த்தைத்தான் நாம் காணவில்லை.

கே.ஏ. ஜவாஹர், ஜோபுநஸீக ஆர். எஸ். சிதம்பரம் போன்ற அனுபவசாலிகளான நடிகர்களின் ஆற்றல்'விழலுக்கிறைத்தநீராயிற்று வரலாற்றுநிகழ்ச்சிகளுக்குமுரணாக முன்னுக்குப்பின் முரண்பாடுடையதாக வசனங்களும், சம்பவங்களும் இருந்தமையால், பார்வையாளரின் பொறுமையும், நிதானமும் சோதிக்கப்பட்டன. வெறும் மேடையலங்காரமும் காட்டுக் கூச்சலும், தத்ரூபமான தந்திரக்காட்சிகளும் நாடகமாகுமோ?

கலைஞர் எம். உதயகுமார் நெடுநாட்களாக கொழும்பு நாடக மேடையிலும், சினிமாவிலும் அனுபவப்பட்டவர். திறமைசாலி. அவருக்குள் இருக்கும் நடிப்பாற்றல் நெறிப்படுத்தப்படாமல், வெறுமனே உணர்ச்சிக் கொப்பளிப்பாக வெளிவருவதுண்டு. ஆயினும், அவர் கவனித்து ஊக்கப்படுத்தப்பட வேண்டியவர்.

'பூகம்பம்' நாடகத்தைப்பொறுத்தமட்டில், அவர் நெறியாளர் கே. செல்வராஜனின் ஆளுகைக்கேற்ற விதமாக நாடகக் கதையை எழுதினாரோ என்னவோ, ஏமாற்றமாய் போய்விட்டது.

கமலஸ்ரீ, மோகன்குமார் வெவ்வேறு பாத்திரங்களை இயல்பாக நடித்துக்காட்ட முடியும் என்பதை இந்த நாடகத்தில் நிருபித்திருக்கிறார்.

நெறியாளர் கே. செல்வராஜனின் ஆர்வமும், ஈடுபாடும் வரவேற்கத்தக்கவை; ஆனால் 'நாடகத் தன்மையுள்ள நாடகங்களைத் தயாரித்து அளிக்க அவர் முன்வர வேண்டும்;

★

இறுதி ஆய்வில் இந்த நாடக விழா, நாடகத்துறையினர் கொழும்பில் நல்ல நாடகங்களை அடுத்தடுத்து மேடையேற்றுவர் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

★

---

## உலக (இந்தியா தவிர்ந்த) நாடுகளிலிருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகைகள்:

**ஈழநாடு**
42, Avlouis Aragon
93000 Bobigry.
Fra nce.

**ஐரோப்பிய முரசு**
1, Alle Molieri B No 2
951 40 Garges Les
Gonnes
France

**தமிழ் ஏடு**
Post Fach 37
3700 Spies
Switzerland.

**ஈழகேசரி**
Moffat Road
London E 17 7 E 2
U. K.

**தமிழன்**
16, Groham Road
South Croydon
Surrey C R 2
7 V A
England.

**ஈழமணி**
Uhland Strl
5880 Ludenscheld, Germany.

# உலக (இந்தியா தவிர்ந்த) நாடுகளிலிருந்து வெளிவரும் தமிழ் சஞ்சிகைகள்:

**தூண்டில்**
Sudasieu Buro
Grosse Heim.
S T R 58
4600. Dortumundh
Germany.

**பனிமலர்**
BCM Polaris
London W C I, 3XX
United Kingdom

**ஓசை**
C/O S. Thiruchelvam
No. 20, Rue Dala
Foliemaki Coures
75011 Paris
France.

**தேடல்**
566 Parliment St
Toronto, O N T
m 4 X 488
Canada.

**நான்காவது பரிமாணம்**
P. O. BOX 203
Stationc
Downsview
Ontario
M 3 N 2 S B
Canada.

**உயிர்ப்பு**
B. M. BOX 4002
London W. C. IN 3XX
U. K.

**தேனீ**
Mwch Holber 11
7151 Allmer Sbach ,Imtal
Germany.

**சக்தி**
Boks 127
1432 BAS - NLH
Norway.

**சமர்**
Boite 158, Bate
150, Rue LeoPd Rechassiere
93300, Aubermi
France.

**மனிதம்**
Poste Fetch 12
3000 Vern 11
Switzerland.

**அ. ஆ. இ**
Post Bus 85326
3508, A.H. Utretht
Netherland.

**சுவடுகள்**
Herzl Bs Gate, 43 0578 Oslo
Norway.

அடுத்த இதழில் தொடரும். தவறவிடப்பட்ட சஞ்சிகைகளின் விபரங்களை வாசகர்கள் எமக்கு அனுப்பி வையுங்கள். ஆ–ர்

# உதயம் பிரசுராலயம்

65. லேடி மனிங் டிறைவ்
மட்டக்களப்பு.
1 - 2 - 1994.

இலக்கிய நெஞ்சங்களே,

உதயம் – சஞ்சிகை

கிழக்கிலங்கையில் முதன் முதலாகத் திட்டமிட்ட வெளியீட்டு நிறுவனமாக 15 - 01 - 1988ல் தோன்றிய "உதயம்" பிரசுராலயத்தினர் ஆகிய நாம் வருடந்தோறும் இரண்டு நூல்களை வெளியிடும் திட்டத்திற்கு அமைய இது வரை பன்னிரண்டு (12) பிரபல கிழக்கிலங்கை எழுத்தாளர் களுடைய நூல்களை வெளியிட்டுள்ளோம்.

இன்றுவரை 785 இலக்கிய நெஞ்சங்கள் ரூபா 100/- செலுத்தி உதயம் வாசகர் வட்ட உறுப்பினர்களாகச் சேர்ந்து பின்வரும் பன்னிரண்டு வெளியீடுகளையும் இலவசமாகப் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

1. தெய்வதரிசனம் – செ. குணரத்தினம்
2. மஞ்சு நீ மழைமுகில் அல்ல – திமிலைத்துமிலன்
3. சந்தன றோஜாக்கள் – ரவிப்பிரியா
4. ஒரு தந்தையின் கதை – அன்புமணி
5. உள்ளத்தின் உள்ளே – ந. பாலேஸ்வரி
6. சொந்தம் எப்போதும் / தொடர் கதைதான் – செ. குணரத்தினம் / புதிய பாதை – சுமதி அற்புதராஜா
7. பாதை மாறுகிறது – திமிலை மகாலிங்கம்
8. நான் நீதியின் பக்கம் – க. அருள்சுப்பிரமணியம்
9. பாதை மாறிய பயணங்கள் – மண்டூர் அசோகா
10. இலக்கியச் சிமிழ் – அகளங்கன்
11. ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது – வ. அ. இராசரெத்தினம்
12. சிறகொடிந்த பறவைகள் – மண்டூர் அசோகா

இலைமறை காயாக உள்ள எழுத்தாளர்களின் நூல்களை ஈழத்து இலக்கியப் பரப்பில் இடம் பெறச் செய்து அவற்றுடன் நீங்கள் உறவாட ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த உதயம் பிரசுராலயத்தினர் சித்திரைத் திங்கள் முதல் கலை, இலக்கிய காலாண்டுச் சஞ்சிகை ஒன்றினை வெளியிட எண்ணி கன்னி வெளியீட்டினை மலரச் செய்துள்ளோம். தொடர்ந்து ஆடி, ஐப்பசி, தை, ஆகிய மாதங்களில் வெளிவரும்.

எமது பணி தொடர உங்களுடைய ஆதரவை வேண்டி நிற்கின்றோம். ரூபா 100/- அன்பளிப்புச் செய்வதன் மூலம் மூன்று வருடங்களுக்கு சஞ்சிகையை (12 வெளியீடுகள்) இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். எமது முயற்சிக்கு ஊக்கமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,

உஷா சிவதாசன்.

ஆசிரியர்.


## படியுங்கள்; சுவைத்திரள்

வீடு சிரிக்க: ஊர் சிரிக்க; நாடு சிரிக்க;
உலகம் சிரிக்க; உங்கள் உள்ளம் சிரிக்க

இப்போது இலங்கை எங்கும் வீறுநடை போடுகிறது.

தொடர்புகளுக்கு:

திக்கவயல். சி, தர்மகுலசிங்கம்
481, பார்றோப், மட்டிக்களி
மட்டக்களப்பு.

# மலையக இலக்கிய வளர்ச்சி

— அந்தனிஜீவா —

மலையக மக்கள் என்று இனம் காணப்படும் மக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூன்றாம் தசாப்தத்திலிருந்து 1828 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் குடியேறியவர்களின் தொடர் சந்ததியினராவார்கள்.

இவர்கள் இங்கு வரும்போது, தங்களோடு தங்களின் பண்பாட்டையும் கொண்டு வந்தார்கள். அவர்கள் அவ்விதம் கொண்டு வந்தது பழமை மிகுந்த வளம் நிறைந்த தென்னிந்திய கலாசாரமாகும். அதனையொட்டியே மலையக இலக்கியம் வளர்ச்சியடைந்துள்ளது.

1824 ஆம் ஆண்டு 16 குடும்பங்களின் வருகையோடு இவர்களின் குடியேற்றம் ஆரம்பமானது. இவர்களின் ஆரம்பகால வெளிப்பாடுகள் வாய்மொழி இலக்கியமாக அமைந்தன.

நாட்டார் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், கதைப்பாடல்கள் தெம்மாங்கு பாடல்கள், குரவைப்பாடல்கள், தாலாட்டு, ஒப்பாரி என்றெல்லாம் இவ்வாய்மொழி இலக்கியம் வகுக்கப்பட்டும் - தொகுக்கப்பட்டும் இருக்கின்றன. இலங்கையில் ஏனைய பிராந்திய வாய்மொழி இலக்கியம் அம்மக்களின் சமூக வாழ்க்கை முறைகளையும், பழக்க வழக்கங்களையும் வெளிப்படுத்தி அமைகின்ற பொழுது, இந்த மலையக மக்களின் வாய்மொழி பாடல்கள் அம்மக்களின் வரலாற்றில் பல நெளிவு, சுளிவுகளையும் வெளிப்படுத்தி இருக்கின்றதை கண்டு கொள்ளலாம்.

கண்டி சீமைக்கு வருவதற்கு இவர்கள் அனுபவித்த கஷ்டத்தையும் கங்காணி மார்களிடம் அனுபவித்த கொடுமையையும் கோப்பி பயிரிடப்பட்ட காலத்தில் ஏற்பட்ட அவலத்தையும், அதன் பின்னர் தேயிலை பயிரிடப்பட்ட காலத்தில் இடம்பெற்ற மாற்றத்தையும் இப்பாடல்களில் அவதானிக்கலாம்.

இவர்கள் வாய்மொழி இலக்கியமான நாட்டார் பாடல்களுடன் ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி, ராஜா தேசிங்கு, நளமகாராஜன் கதை, விக்கிரமாதித்தன் கதை, மாரியம்மன் தாலாட்டு போன்றவற்றை பாடியும், படித்தும் வந்தார்கள்.

1920 ஆம் ஆண்டுவரை இந்த நிலையே நீடித்தது. அதன் பின்னர் அவர்களது உணர்வுகள் அச்சில் இடம்பெற்றன. சட்ட நிருபண சபையிலும், அரசாங்க சபையிலும் கோ. நடேசய்யர் பிரதிநிதித்துவம்

வகித்த காலகட்டத்தில் மலையக மக்களிடையே ஓர் எழுச்சிக்கும் ஆக்க இலக்கிய முயற்சிக்கும் வித்திட்ட பெருமை அவரையே சாரும்.

தென்னிந்திய பிராமணரான கோ நடேசய்யர் தஞ்சாவூரில் அரசாங்கப் பணியில் இருந்துவிட்டு பின்னர் பத்திரிகை ஒன்றில் பணியாற்றி, பத்திரிகைக்கு சந்தா திரட்ட இலங்கை வந்துள்ளார். பின்னர் 1920ல் இலங்கை வந்து 'தேசநேசன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக பொறுப்பேற்றார்.பின்னர்''தேசபக்தன்''என்ற நாளிதழை நடத்தியுள்ளார். பத்திரிகையாளராக தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட அய்யர். மலையக மக்களின் விடிவுக்காக தம்மை அர்ப்பணித்தது மாத்திரமல்லாது அம்மக்களுக்காக எழுதியும், பேசியும். மகாகவி பாரதியின் பாடல்களை தனது மனைவியார் மீனாட்சி அம்மாளின் இனிய குரலின் மூலம் பாடவைத்ததுடன், மலையக இலக்கிய முயற்சிகளுக்கும் வழிகாட்டியாக, திகழ்ந்துள்ளார்.

ஆனால், இதற்கு முன்னர் கோப்பிக் காலத்தில் கண்டி மாநகருக்கு அருகில் தெல்தோட்டையில் அருள்வாக்கி அப்துல் காதர் புலவர் வாழ்ந்தார். இவரே மலையக கவிதை இலக்கியத்துறைக்கு முன்னோடியாவார். ''வித்துவதீபம்'' என்றழைக்கப்பட்ட அருள்வாக்கி அப்துல் காதர் புலவர் மலையகத் தோட்டத் தொழிலாளர் மத்தியில் மதிப்புப் பெற்று விளங்கினார். அவர்கள் மத்தியில் இடம்பெற்ற விசேட சடங்கு வைபவங்கள், கவிதைப் பொழிவுகள், பொது விழாக்களில் பங்குபற்றி வெண்பா, கும்மி, நொண்டிச்சிந்து போன்ற பாடல்களையும் மலையகச் சூழ்நிலையைக் கருவாகக் கொண்டு பாடிக்காட்டியுள்ளார். இவர் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். கண்டி மாநகருக்கு அருகிலுள்ள தெல்தோட்டையில் 1866 ஆம் ஆண்டு பிறந்த இவர் 1918 ஆம் ஆண்டு அமரரானார்.

1920 ஆம் ஆண்டுக்குப் பின்னரே மலையகத்தில் மலைக்கள் போல் கவிதை முயற்சிகள் வாய்மொழிப் பாடல்களாக. சிறு சிறு துண்டுப் பிரசுரங்களாக தோட்டத் தொழிர்லாளர்களிடையே பரப்பப்பட்டன.

கோ. நடேசய்யர் தனது துணைவியரான திருமதி மீனாட்சி அம்மையாருடன் தோட்டம் தோட்டமாகச் சென்று தொழிலாளருக்கு உணர்வையூட்டும் பிரசங்கங்களை செய்வார் மனைவியார் தனது இனிய குரலால் மகாகவி பாரதியாரின் பாடல்களையும், தாமே இயற்றிய பாடல்களையும் பாடுவார். அவற்றை சிறு சிறு பிரசுரமாக அச்சிட்டு விநியோகித்தார்.

காட்டைத் திருத்துவது இந்தியனாலே – நீங்கள்<br>
கற்றுக்கொண்டு பேசுவது இந்தியனாலே - நீங்கள்<br>
நாட்டைத் திருத்தினதும் இந்தியனாலே – நீங்கள்<br>
நன்றிகெட்டு பேசுவதாகாது சொல் மேலே........''

இதுபோன்ற பாடல்கள் அடங்கிய பிரசுரமொன்றை ''இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை'' என்ற பெயரில் திருமதி மீனாட்சி அம்மையார் எழுதிய பாடல்களை நடேசய்யர் அச்சிட்டு தோட்டத் தொழிலாளர்களிடையே 1940-ல் பரப்பியுள்ளார். இது மாத்திரமன்றி நடேசய்யரின் எழுத்தும் பேச்சும் தோட்டத் தொழிலாளர்களிடையே ஓர் எழுச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியது. இதனால் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய கவிதைகளை தொழிலாளர்கள் பாடக்கூடிய எளிய பாடல் வடிவில் துண்டுப்பிரசுரங்களாகவும், சிறிய நூல்வடிவிலும் நாவலப்பிட்டி எஸ். எஸ். ஆர். பெரியாம் பிள்ளை, எஸ் கோவிந்தசாமித்தேவர், காசி. ரெங்கநாதன், சீனி வாசகம், தொண்டன் ஆசிரியர் எஸ். எஸ். சிவகாமி நாதன், பதுளை வ. ஞானப்பண்டிதன், பி ஆர். பெரியசாமி போன்றவர்களால் வெளியிட்டும் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பாடியும் பரப்பியும் வந்தார்கள்.

கவி சிதம்பரநாத பாவலர் வீரகேசரியில் தொடர்ந்து எழுதினார். 1934 ஆம் ஆண்டு ''பௌத்தாயன்'' என்ற பெயரில் புத்தபெருமானின் சரித்திரத்தை காவியமாக எழுதினார். பாரத கவியரசர் ரவீந்திரநாத் தாகூர். கவிக்குயில் சரோஜினி தேவி போன்ற இந்திய கவிகளின் படைப்புக்களாலும், ஆங்கில கவிதைகளாலும் உந்தப்பட்டு கவிதைப் படைத்தவர் இருவர். ஒருவர் மலையக மக்கள் கவிமணி சி. வி. வேலுப் பிள்ளை. மற்றவர் கோ. கணேஷ்.

ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதும் ஆற்றல்மிக்க தமது எழுத்துக்களால் சி. வி. வேலுப்பிள்ளை மலையக மக்களின் துன்ப துயரங்களை அகில உலகிற்கே வெளிச்சம் போட்டுக் காட்டினர். அவரது ''இன் சிலோன் டி கார்டன்'' (In Cayion Tsa Carden) என்ற கவிதை நூலே இந்த அரும்பணியைச் செய்தது. இதனை மலையகத்தின் மற்றும் ஒரு கவிஞரான சக்தி பாலையா ''தேயிலைத் தோட்டத்திலே..'' என்ற பெயரில் தமிழ் வடிவம் கொடுத்தார்.

1963ல் ஆசிய ஆபிரிக்க கவிதைகளில் முதலாவது தொகுப்பு வெளிவந்தபோது இலங்கை, இந்தியா, சீனா, கொங்கோ, இந்தோனேசியா, கொரியா, சூடான், தங்கனிக்கா, ரஷ்யா, வியட்நாம் ஆகிய பத்து நாடுகளைச் சேர்ந்த எழுபது கவிஞர்களின் கவிதைகள் இடம் பெற்றன. இதில் இடம்பெற்ற ஒரே தமிழ் கவிஞரின் கவிதை இந்திய வம்சாவளியினரான சி. வி. வேலுப்பிள்ளையுடையதாகும்.

''இனி படமாட்டேன்'' என்ற நாவல் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் எம். ஏ. உயர்வகுப்புக்கு பாட நூலாக உள்ளது.

இன்று நம்மிடையே வாழும் மூத்த எழுத்தாளரான இரட்டையர்களில் ஒருவரான கோ. கணேஷ் கவிதை மொழிபெயர்ப்பு என்று தன் ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார். 1946ல் கே. இராமநாதனுடன் சேர்ந்து ''பாரதி'' என்ற இலக்கிய சஞ்சிகையை நடத்தியுள்ளார். இந்திய எழுத்தாளர்களான பிரேம்சந்த், கே. ஏ. அப்பாஸ், முல்கிராஜ் ஆனந்த போன்றவர்களின் படைப்புகளை மொழிபெயர்த்துள்ளார். ஹோசிமின் கவிதைகள், லூசுனி கதைகள் ஆகியவற்றை மொழிப்பெயர்த்து நூலாக வெளியிட்டுள்ளார்.

1956ஆம் ஆண்டுக்கு பின்னரே மலையகத்தில் கல்வி எல்லோருக்குமுரிய சொத்தாக மாறியது. இதே வேளையில் தமிழகத்தில் ''மணிக்கொடி'' சகாப்தம் உதயமாகியது. இதன் தாக்கம் மலையகத்தை எட்டிப்பார்க்க தவறவில்லை. பெரியார் ஈ. வே. ராவின் திராவிடக்கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியவற்றின் பிரசார ஏடுகளும், பாரதிதாசன் கவிதைகள், நாடக நூல்களும், மலையகத்திற்கும் வரத்தொடங்கின. இதன் தாக்கம் மலையக இளைய தலைமுறையினரிடையே ஒரு மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்த தவறவில்லை.

இதனைத் தொடர்ந்து மலையக இலக்கிய வளர்ச்சியில் ஓர் அபரிதமான விழிப்புணர்வு அறுபதுகளில் ஏற்பட்டது. இலக்கிய உலகில் புதுமைப் பார்வையும், புதிய வீச்சுக்களும் உதயமாகின. பல புதியவர்கள் அதிக உற்சாகத்துடன் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டனர். அட்டன் ஹைலன்ட் கல்லூரியைச் சேர்ந்த இரட்டையர்களான இரா. சிவலிங்கமும், திருச்செந்தூரனும் இவர்களுக்கு உந்து சக்தியாக விளங்கினார்கள். இவர்களின் வழி காட்டலுடன் ஒரு தலைமுறையே எழுத்துலகிற்கு காலடி எடுத்து வைத்தது. அதற்கு உறுதுணையாக கண்டி க. ப. சிவம் வெளியிட்ட மலையகத்தின் 'மணிக்கொடி' என்றழைக்கப்பட்ட 'மலைமுரசு' துணை நின்றது.

இக்காலகட்டத்தில் கடல்கடந்த இலக்கியப் போட்டி ஒன்றில் 'கல்கி' சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் திருச்செந்தூரனின் 'உரிமை எங்கே? என்ற சிறுகதைக்கு பரிசு கிடைத்தது இது பலரின் பார்வையை மலையகத்தின் பக்கம் திருப்பியது. இதனைத் தொடர்ந்து ஒரு புதிய பரம்பரை மலையக சிறுகதை இலக்கியத்திற்கு வலிமை சேர்த்தது. இவர்களை மலையக இயக்கங்களும் சஞ்சிகைகளும் தேசிய தினசரிகளும் உற்சாகமூட்டி உரமூட்டி வளர்த்தன.

இன்று மலையக சிறுகதை இலக்கியத்தில் என். எஸ். எம். ராமையா தெளிவத்தை ஜோசப், சாரல் நாடன், மலரன்பன், மு. சிவலிங்கம்,

மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், மொழிவரதன், நுவரெலியா சண்முகநாதன், மல்லிகை சிவகுமார் என சுட்டிக்காட்டலாம்.

இதே போன்று கவிதையில் அறுபதுகளில் மு. கு. ஈழக்குமாரின் முயற்சியால் வெளிவந்த ''குறிஞ்சிப் பூ'' கவிதைத் தொகுதியை தொடர்ந்து கவிதா சக்திமிக்கவர்கள் களத்திற்கு வந்தனர். எழுபதுகளில் பல புதியவர்கள் கவித் துறைக்கு காலடி எடுத்து வைத்தனர். இவர்களில் அரு. சிவானந்தனை சிறப்பாக குறிப்பிடலாம். இவர் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் காரணமாக தமிழகம் சென்று விட்டாலும் ''வண்ணச்சிறகு'' என்ற பெயரில் இவரின் கவிதைகள் நூல்களாக வெளிவந்தன.

எண்பதுகளுக்கு பிறகு உருவான கவிஞர்களில் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியான சு.முரளிதரனைச் சுட்டிக்காட்டலாம்.

முரளிதரனின்''கூடைக்குள் தேசம்'' என்ற ஹைக்கூ தொகுதி வெளிவந்துள்ளது.

கவிதைத்துறையில் இன்று எழுதிக் கொண்டிருப்பவர்களில் முக்கியமானவர்கள் சிலரைக் குறிப்பிடலாம். குறிஞ்சித்தென்னவன், எம். ஷி. எம். சுபைர், தமிழோவியன்: பண்ணாமத்துக் கவிராயர், எம். சி.எம் ஹலீம்தீன், மலைத்தம்பி, சாரணகையூம், க. ப. லிங்கதாசன், எஸ்.பி. தங்கவேல், ஏ.பி.வி. கோமல், எம். இராமச்சந்திரன், புசல்லாவை இஸ்மாலிகா, வெலிமடை ரபிக், இராகலை பன்னீர் என்று பட்டியலை நீட்டலாம். ஆனால் காலங்கருதி இன்று உயிர்த்துடிப்புடன் இயங்கிக் கொண்டிருப்பவர்களையே குறிப்பிட்டுள்ளேன்.

மலையக நாவலிலக்கியத்திலும் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. கோகிலம் சுப்பையாவின் ''தூரத்துப் பச்சை'' முதல் சி. வி. வேலுப்பிள்ளையின், ''இனிப்பட மாட்டேன்'' வரை மலையக மக்களின் வரலாற்று ஆணவமாகக் கூட இந்த நாவல்களைக் கொள்ளலாம் மலையகத்தில் பிறக்காமல் மலையக மண்ணுடன் சங்கமமாகி விட்ட தி. ஞானசேகரின் ''குருதி மலை'' க. சதாசிவத்தின் ''மூட்டத்திலுள்ளே'' மலையக நாவலிலக்கியத்தில் குறிப்பிடக்கூடிய படைப்புகளாகும். மற்றும் நந்தியின் ''மலைக்கொழுந்து'' போ. பெனடிக் பாலனின் ''சொந்தக்காரன்'' மலையக மக்களைப் பற்றிய சிறப்புகளை எடுத்துச் சொல்கின்றன.

பேராசிரியர் கைலாசபதி 'இலங்கை தமிழ் இலக்கியத்திற்கு மலையகம் புதிய ரத்தம் பாய்ச்சுகிறது' எனக் கோடிட்டுக் காட்டினார். என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலப்பிட்டி பிரதேச சாகித்திய விழா (14-893) வின் இலக்கிய கருத்தரங்கில் நிகல்த்தப்பட்ட சிறப்புரை:

# SANDRA IRON WORKS

**We are Specialist in steel works**

YOU WILL NOT REGRET PLACING YOUR ORDERS FOR

- *WINDOW GRILLS*
- *BEDS AND TABLES*
- *GATES(COLLAPSIBLE AND SLUICE)*
- *T. V. STANDS AND KITCHEN RACKS*
- *CHAIRS(STACKABLE AND FOLDING)*
- *ROOF TRUSSES*
- *WIND MILLS*

*AND*

*MANY OTHER ITEMS TO SUIT YOUR NEEDS*

WALK IN AND ASK FOR:

**C. FULTON SELLAR**
at 67, Lady Manning Drive,
Batticaloa.

கலைஞனைக் கௌரவிக்காத சமூகத்திடமிருந்து கற்றுத் தேறுவதற்கு எதுவுமேயிருப்பதில்லை. நல்லதொரு கலைஞன், தான் செல்லுமிடமெல்லாம் சிறப்புப் பெறுவான்.

அந்த வகையில் சிறப்புப்பெறும் இந்தியக்கலைஞர் - பத்திரிகையாளர் கோமல் சுவாமிநாதன் இந்த இதழில் கௌரவிக்கப்படுகிறார்.

அதே வேளை வாழும் போதே கௌரவிக்கும் மனப்பாங்குடன் நமது கலைஞர்கள் திமிலைத்துமிலன் கிருஷ்ணபிள்ளை அவர்களும். வில்லிசைக் கலைஞன் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களும் இவ்விதழில் கௌரவிக்கப்படுகிறார்கள்.

சுவாமி விபுலாநந்தரை உவந்தளித்த இம் மண்ணின் மற்றோர் பேரறிஞரே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். அவரது ஞாபகார்த்தமாக இரங்கல் கவிதை ஒன்றும் பிரசுரமாகிறது.

இத் தலையங்கத்தை எழுதிக்கொண்டிருக்கும் அதே வேளை 'புலவர்மணி' யின் மூத்த புதல்வர் தர்மலிங்கம் அவர்களின் அகாலமரணச் செய்தி நம் காதில் விழுகிறது. அன்னாரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இனிவரும் இதழ்கள் சிறப்புற படைப்பாளிகளிடமிருந்து காத்திரமான விடயதானங்களை எதிர்பார்க்கிறோம். பிரசுரிக்கப்படும் விடயங்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். வாசகர்கள், இலக்கிய ஆர்வலர்களிடமிருந்து இதழ் பற்றிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எதிர்பார்க்கிறோம்.

அடுத்த இதழில் மேலும் நிறைந்த - நிறைவான விடயங்களுடன் உங்களைச் சந்திப்போம்.

— ஆசிரியர்

# உதயத்தின் குரல்

மனித வாழ்வின் விழுமியங்களை மாறாத அழகுடன், கலாபூர்வமாகச் சித்தரிப்பவை கலை இலக்கியங்களே!

கலை - இலக்கியம் இல்லாத வாழ்க்கை ஆலயங்களே இல்லாத வனாந்தரங்கள் போலவும், உப்பில்லாப் பண்டங்கள் போலவும் உப்புச்சப்பற்று சூனியமாய்த் தோன்றுப.

எனவே, மக்கள் நலன் கருதி, வாசகரிடையே வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்த வேண்டுமெனும் குறிக்கோளுடன் 'உதயம்' பவனிவருகிறான். நமது இலட்சியம் நிறைவேற உங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

சமூகமேம்பாட்டுக்கு வழிவகுக்கும் வகையில் நல்ல ஒரு கலைஞனால் உள்வாங்கப்படும் வாழ்வின் யதார்த்தங்கள் சமூகத்திற்குக் கற்றுத்தரும் பாடங்களோ ஏராளம். பத்திரிகைகள், சஞ்சிகைகளே இம் மகத்தான பணிக்கு உந்து சக்திகளாக விளங்குகின்றன.

(தொடர்ச்சி - 63ம் பக்கம்)



ஆசிரியர்:
உஷாதேவி சிவதாசன்
ஆசிரியர் குழு:
மண்டூர் அசோகா
சந்திராணி தங்கவேல்
பிலோமினா மகேஸ்வரன்

தொடர்பு:
**உதயம்**
65, லேடி மனிங் டிறைவ்,
மட்டக்களப்பு
ஸ்ரீலங்கா
☎ *065 – 2086.*

*With Best Compliments From :*

# UNILAC PAPER HOUSE

**General Merchants & Commission Agents, Importers and Dealers in All Type of Printing Papers, Board and Cartoon Boxes.**

**53/1, Prince Street,**
**Colombo - 11**
**Telephone : 01 - 329096**

**LAXSU**

*GRAPHIC* **(PRIVATE) LIMITED.**

253/A, George R. De Silva Mawatha, Colombo -13. T. Phone: 330812